# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



உன்னதத்திலிருக்கிற

தேவனுக்கு மகிமையும்,

பூமியிலே சமாதானமும்

உண்டாவதாக!

லூக்கா 2:14

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

November - December 2021
Volume : 61

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 6

ஆசிரியரிடமிருந்து.........!

# உங்களுக்குச் சமாதானம்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும் அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்'' என்றும், ''அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை'' என்றும் முன்னுரைக்கிறார் (ஏசாயா 9:6,7). மீகா என்னும் தீர்க்கதரிசியும் இயேசுவைக் குறித்து "இவரே சமாதானக் காரணர்" என்கிறார் (மீகா 5:5). ஆசாரியனாகிய சகரியா தீர்க்கதரிசனமாய், "நம்மை சந்தித்து, நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்த வந்த அருணோதயம் "இயேசு" என்று பாடுவதை வாசிக்கிறோம் (லூக்கா 1:78,79). இப்படி நமக்காக பிறந்த இயேசு, நம்முடைய வாழ்விலே சமாதானப்பிரபுவாக எவ்விதம் செயல்படுகிறார் எனவும், அவர் நமக்கு அளிக்கும் சமாதானத்தின் மகத்துவம் எத்தகையது என்பதைக் குறித்தும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மூன்று நிலைகளிலே இயேசு நமக்கு சமாதானம் அளிக்கிறார்.

## 1. உன்னத தேவனோடு சமாதானம் (UPWARD PEACE)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 5:1). நாம் தேவனுக்கு சத்துருக்களாய் இருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் (ரோமர் 5:10). நாம் எப்படி தேவனுக்கு சத்துருக்கள் ஆனோம்? ஆதாம் ஏவாள் என்னும் முதல் மனிதர்களுடைய பாவத்தினால் முழு மனுக்குலமும் பாவத்திற்குள்ளானது (ரோமர் 5:12). ஆகவேதான் தாவீது "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறுகிறார் (சங்.51:5). "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 59:2). நம் பாவத்தினால் நாம் மரணத்துக்கு பாத்திரர்களானோம் (ரோமர் 6:23). நம்முடைய பாவங்கள் நம்மை படைத்த தேவனிடம் நமக்கு இருந்த உறவையும் சமாதானத்தையும் கெடுத்து போடுகிறது. இயேசுவோ தமது பரிசுத்த இரத்தத்தை சிந்தி, நமக்கு சமாதானத்தை உண்டாக்கி, உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார் (கொலோ.1:20). மேலும் இயேசுவே நம்முடைய சமாதான காரணராகி, தேவனோடு நமக்கிருந்த பகையை சிலுவையினால் கொன்று, நம்மை புதிய மனுஷராக்கி, சமாதானம்பண்ணி, தேவனுடன் நம்மை ஒப்புரவாக்கினார் (எபே. 2:14-16).

பாவம் நம் சமாதானத்தை கொள்ளையாடிவிடும். "துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை" (ஏசாயா 48:22; 57:21). பாவிகளின் வாழ்வு சமாதானமின்றி கொந்தளிக்கிற கடல்போல் இருக்கும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 57:20). அநேக பாவங்களினால் சமாதானம் இழந்து தவித்த ஒரு பெண், இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அவரிடம் மன்னிப்பு பெற வேண்டி அவரை தேடி வந்தாள். இயேசு

அவளை நோக்கி, “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது; சமாதானத்தோடே போ” என்றார் (லூக்கா 7:37,48,50). உன்னத தேவனோடு நம்மை ஒப்புராக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தேவனோடுள்ள சமாதானத்தை இழந்து தவிக்கிறீர்களோ? இன்றே உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பி, இயேசுவின் இரத்தம் அருளும் மன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

## 2. உள்ளத்தில் சமாதானம் (INWARD PEACE)

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக”. “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக” என்று இயேசு கூறுகிறார் (யோவான் 14:1,27). பயங்களும், கவலைகளும் உள்ளத்தின் சமாதானத்தை கெடுக்கிறது. உலகம் தரும் சமாதானம் நிலையற்றது. ஆனால் இயேசுவோ நம் உள்ளத்தை கலங்கச் செய்யும் பயங்களையும் கவலைகளையும் முற்றிலும் நீக்கிவிடுகிறார். இது எப்படி நடக்கும்? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து அவரை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும். “உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்” என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 26:3). பூரண சமாதானம் என்றால் நிலையான, எப்பொழுதும் நிலைத்திருக்கும் சமாதானம் ஆகும். தேவன் தம்மை முழுமையாய் நம்பி, பற்றிக் கொள்கிறவர்களுக்கு தெய்வீக பாதுகாவலையும், பராமரிப்பையும் நிரந்தரமாக வழங்குகிறார் என்பதே இதன் பொருள்.

நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் தேவனிடத்தில் நம் உள்ளத்தை ஊற்றிவிடும்போது, அவருடைய பூரண சமாதானம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ளும் என்று பவுல் கூறுகிறார் (பிலி.4:6,7). 12 வருடகாலமாக பெரும்பாடு என்னும் நோயினால் அவதியுற்று, அனைத்தையும் செலவழித்தும் சுகமின்றி, சமாதானமின்றி தவித்த ஒரு பெண் இயேசுவை முழுமையாக விசுவாசித்தபோது அற்புத சுகமும், சமாதானமும் பெற்றாள் (லூக்கா 8:43-48). யூதரைக் குறித்த பயத்தினால் கலங்கியிருந்த அப்போஸ்தலருக்கு இயேசு சமாதானம் தந்து தேற்றினார் (யோவான் 20:19,21,26). மீதியானியரால் தாக்கப்படுவோம் என்று அஞ்சி வாழ்ந்த கிதியோனுக்கு “சமாதான கர்த்தராக” (யெகோவா ஷாலோம்) தரிசனமாகி அவனை திடப்படுத்தினார் (நியா.6:23,24). இன்றே உங்கள் உள்ளத்தை கலங்கச் செய்யும், பயங்களையும், கவலைகளையும் சமாதானப்பிரபுவாகிய இயேசுவிடம் ஒப்படைத்து, அவர் தரும் தெய்வீக பூரண சமாதானத்தை உள்ளத்தில் பெற்று மகிழுங்கள்.

## 3. உறவுகளில் சமாதானம் OUTWARD PEACE

உன்னத தேவனோடும், உள்ளத்திலும் மட்டும் அல்ல; நம் உறவுகளிலும் நமக்கு சமாதானத்தைத் தர இயேசு விரும்புகிறார். “கூடுமானால் உங்களால் ஆன

மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது (ரோமர் 12:18; எபி.12:14). இன்று பல குடும்பங்களிலே சமாதானம் இன்றி வன்முறை நிலவுகிறது. கணவன் மனைவிக்கிடையே சமாதானமின்றி விவாகரத்துகள் பெருகியுள்ளது. உறவுகளிலே சமாதானமின்றி போவதற்குக் காரணம் அன்பின்மையும், அகம்பாவமும் (Ego), மன்னியாமையுமே. இயேசு நம்மீது வைத்த நிபந்தனையற்ற அன்பினாலே தாம் தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாகி, மரணபரியந்தம் கீழ்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று வாசிக்கிறோம் (பிலிப்பியர் 2:6-8). மேலும் இயேசு முந்தி நம்மில் அன்புகூர்ந்து, நாம் பாவிகளா யிருக்கையில் நமக்காக சிலுவையில் மரித்து, தம்முடைய நிபந்தனையற்ற அன்பை விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8).

இயேசுவை பின்பற்றும் நம்மிடம் இப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தையும், நிபந்தனையற்ற அன்பும் இருக்குமாயின் நமது உறவுகளில் சமாதானம் உண்டாகும். இயேசு நம்முடைய சமாதான காரணராய் இருந்து பகையாகிய நடுச்சுவரை தகர்த்து போடுகிறார் (எபே.2:14). இயேசு கூறிய கெட்டக்குமாரனைப் பற்றிய உவமையை லூக்கா 15:10-24 வசனங்களில் வாசிக்கிறோம். ஆணவத்தினால் தன் தந்தையை விட்டுபிரிந்து சென்ற இளையமகன், தனது தவறை உணர்ந்தவனாய், மனம்வருந்தி, தாழ்மையுடன் தன் தந்தையிடன் மன்னிப்பு கோர வருவதையும், அவன் கேட்கும் முன்னரே அவன் தந்தை தனது நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தி அவன் செய்த குற்றத்தை மன்னிப்பதையும் பார்க்கிறோம். இத்தகைய அன்பும், தாழ்மையும், மன்னித்தலுமே உறவுகளிலே நிலையான சமாதானத்தையும், அந்நியோந்நியத்தையும் கொண்டு வரும். இன்று உங்கள் உடைந்த உறவுகளையும், நீங்கள் இழந்து போன உறவுகளையும் எண்ணி கண்ணீர் வடிக்கிறீர்களோ? கவலைப்படாதீர்கள். நீங்கள் அன்புடனும், தாழ்மையுடனும் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் தயாராக இருப்பீர்களானால், உங்கள் உறவின் விரிசல்களை சரி செய்யவும், நீங்கள் இழந்த உறவுகளை மீட்டுத்தரவும் இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கும் நமது பிதாவாகிய தேவன் சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33; எபிரெயர் 13:20). குமாரனாகிய இயேசு சமாதானப்பிரபு மற்றும் சமாதானக்காரணர் (ஏசாயா 9:6; மீகா 5:5). பரிசுத்த ஆவியானவரும் கூட சமாதானத்தின் ஆவியானவரே ஆவார் (எபே.4:3). தேவன் நமக்கு அருளியுள்ள வேதமும் சமாதானத்தின் சுவிசேஷமே (அப்.10:36; எபே.6:15). கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் என்று வேதம் கூறுகிறது (சங்.29:11). ஆகவே அன்புக்குரியவர்களே, இயேசு கிறிஸ்துவின் பூரண சமாதானம் உங்கள் வாழ்வில் நிறைந்து, பெருகுவதாக!

சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும்
உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக.
கர்த்தர் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பாராக (2 தெச. 3:16)!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 16. உலகத்தோடு ஒத்துப் போகவில்லை

தொடர்ச்சி

### அன்று

அன்றிருந்த திருச்சபை உலகத்தோடு ஒத்துப்போகவில்லை. தனித்தன்மையைப் பாதுகாத்தது. பரிசுத்த நிலையில் உறுதியாய் நின்றது.

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).

இந்த உலக பழக்கவழக்கங்களுக்கு ஒத்த வேஷம் தரித்து நடக்கவில்லை. பாவத்தைவிட்டுப் பிரிந்து நின்றது. உலகப்பிரகாரமான சடங்காச்சாரங்களில் ஈடுபடுத்தி தன்னைக் கறைப்படுத்திக் கொள்ளவில்லை.

இதனால்தான் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர், சிறையில் அடைக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். பாவத்தை பாவம் என்று கண்டிக்கத் தவறவில்லை.

அன்றுள்ள யூதமார்க்கத்தாரோடு இணங்கிப் போயிருந்தால் அப்போஸ்தலர் பாடுகளை சந்தித்திருக்க மாட்டார்கள். ரோம அரசாங்கத்தோடு ஒத்துப் போயிருந்தால் உபத்திரவம் இருந்திருக்காது. சத்தியத்தை தைரியமாகப் பேசினார்கள். பாவத்திற்கு எதிர்த்து நின்றார்கள்.

லீஸ்திரா என்ற ஊரிலே ஒரு முடவன் அற்புத சுகம் பெற்று நடந்தபோது, அந்த ஊரார் தேவர்கள் மனுஷ ரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லி பவுலையும், பர்னபாவையும் வணங்கவும், அவர்களுக்கு மாடுகளைப் பலியிடவும் ஆயத்தமானார்கள். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்கள் வஸ்திரங்களைக் கிழித்து இப்படி தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாதிருங்கள். நாங்களும் உங்களைப் போல மனுஷர் தானே என்று சத்தமிட்டனர். மனுஷரால் வந்த புகழ்ச்சியை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

### இன்று

இன்றுள்ள திருச்சபை உலகத்தோடு ஒத்துப்போவதில் அதிக ஆர்வத்துடன் இருக்கிறது. பாவத்தைக் கண்டிப்பதில்லை. ஒரு நாளில் பாவம் என்று கூறப்பட்டவைகள், இன்று வெறும் பெலவீனம் என்று பெயரிடப்பட்டுள்ளது. குடியும், வெறியும், விபச்சாரமும், வேசித்தனமும் சபையில் சாதாரணமாக நடைபெறுகிறது. கிறிஸ்தவ சபை என்று தங்களை அழைத்துக் கொள்ளும் பல சபைகளில் ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண் திருமணம் நடக்கிறது. புறஜாதியாரிடத்தில் கூட கேவலமாகப் பேசப்படுகிற இந்த பாவங்கள் இன்று சபையில் செயல்படுகிறது என்றால் எவ்வளவு வேதனை.

சபைப் போதகர்களில் பலர், சபைத் தலைவர்களில் பலர் தங்களை ஆண்புணர்ச்சிக்காரர்கள் என்று சொல்ல வெட்கப்படவில்லையே? இப்படிப்பட்ட ஒழுக்கங்கெட்டவர்களுக்கு சபையில் உயரிய பதவிகள் கொடுக்கப்படுகின்றனவே.

உங்களில் பலர் கேட்கலாம், இதெல்லாம் பெயர் கிறிஸ்தவ சபைகளில் தானே நடக்கிறது என்று. உலகத்தின் பார்வையில் எல்லாருமே கிறிஸ்தவர்கள் தான் என்பதை மறக்க வேண்டாம். கிறிஸ்தவ பெயருள்ள எல்லாரும் கிறிஸ்தவர்களாகவே உலகம் காண்கிறது. அவர்களிடத்தில் போய் இவர்கள் பெயர் கிறிஸ்தவர்கள், மெய் கிறிஸ்தவர்கள் அல்ல என்று சொல்ல முடியுமா? சொன்னாலும் அது அவர்களுக்கு விளங்குமா?

சரி, ஆவிக்குரிய சபைகளில் எல்லாம் ஒழுங்காய் நடக்கிறதா? எத்தனை பிரிவினைகள், எத்தனை அரசியல் தன்மைகள், எத்தனை கோர்ட் கேஸ்கள், ஏன் இந்த அவலம்? புறங்கூறுதல், பகை, கசப்பு, காமவிகாரம், பெருமை, மதிகேடு போன்றவை ஆவிக்குரிய சபைக்குள்ளும் காணப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் என்றால், பாவ வாழ்க்கையை விட்டு வெளியே வந்தவர்கள். பெயருக்கு கிறிஸ்தவர்கள் என்பது வேதாகமக் கொள்கையல்ல.

இரட்சிக்கப்பட்டு, ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள் யாவரும் எந்த சபையைச் சார்ந்திருந்தாலும் அவர்களே கிறிஸ்தவர்கள். இரட்சிக்கப்படாமல், பாவ வாழ்க்கையிலிருந்து விடுபடாமல் எந்த சபைக்குச் சென்றாலும் அவர்கள் எந்த சபைப் பதவியிலிருந்தாலும் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. இதுதான் உண்மை.

- தொடரும்

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

## நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484

## IN YOUR HOME

- ◈ EXALT God
- ◈ EXEMPLIFY christlikeness
- ◈ ENCOURAGE faithfulness
- ◈ EDUCATE your children in God's ways
- ◈ ESTABLISH Godly values





# உபாகமம் : Deuteronomy

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களாகிய ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவை **பஞ்சாகமம்** என்று அழைக்கப்படுகின்றன. இப்புத்தகங்களை யூதர்கள் **'தோரா'** என்று அழைத்தனர். தோரா என்பது வழிகாட்டும் புத்தகமாகவும், போதனைப் புத்தகமாகவும், இஸ்ரவேலரின் சரித்திரப் புத்தகமாகவும் யூதர்களால் கொள்ளப்பட்டது.

**உபாகமம்** என்பதன் பொருள் **இரண்டாவது நியாயப்பிரமாணம்** என்பதாகும். ஏற்கெனவே சீனாய் மலை அடிவாரத்தில் வைத்து அவர்களுக்குக் கொடுத்த பிரமாணங்களைப் புதியக் குடியிருப்பாகிய கானான் தேசத்தில் எப்படிக் கைக்கொள்ளவேண்டும் என்ற விபரங்களையும் உபாகமம் தருகிறது. கானானைச் சுதந்தரிப்பது எப்படி? அங்குள்ள புறஜாதியர் நடுவில் எப்படி வேறுபட்டு வாழவேண்டும் என்ற போதனைகளையும் இப்பொழுதுள்ள புதிய சந்ததியினருக்கு உபாகமம் தருகிறது.

மோசே இப்புத்தகத்தை கி.மு.1405-ல் எழுதினான் என்பதற்கு நம்பத்தக்க ஆதாரங்கள் உண்டு. மோசேயின் மரணம் பற்றிய 34-ம் அதிகாரத்தில் வரும் விபரங்கள், அவனது மரணத்திற்குப்பின்பு யோசுவா பதிவு செய்திருக்கவேண்டும் என எண்ண இடமுண்டு.

**எண்ணாகமம்** முரட்டாட்டமிக்க இஸ்ரவேலரின் 39வருட வனாந்திரப் பயணத்தை விவரிக்கிறது. அவர்களெல்லாரும் வனாந்தரத்தில் செத்து மடிந்தனர் (எண்.3-14). ஆனால் உபாகமப் புத்தகமோ, கானானின் எல்லைகளிலுள்ள காதேஸ்பர்னேயாவிலுள்ள மோவாபின் சமவெளிகளில் புதிய சந்ததியினர் தங்கியிருந்த **ஒரு மாத சரித்திரத்தை மட்டுமே குறிக்கிறது.**

இப்புத்தகத்தில் மோசே தனது உரைகளையெல்லாம் வழியனுப்புச் செய்திகளாகவே (Farewell messages) தருகிறார்.

வனாந்தரத்தில் தங்கள் பெற்றோர், உற்றார், உறவினர்களுடன் 39 ஆண்டுகளாய் அலைந்து திரிந்து, (அவர்களில் எகிப்திலிருந்துப் புறப்பட்டபோது இருபது வயதுக்கு மேற்பட்டிருந்த அனைவரையும் சாகக்கொடுத்து), தங்கள் அலைச்சல்களை முடித்து, வாக்குத்தத்த தேசத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயுள்ள புதிய தலைமுறையினர், இங்கு **கானானின் கரையோரத்தில்** முகாமிட்டிருக்க நாம் காண்கிறோம்.

எகிப்தில் தாங்கள் அனுசரித்த முதலாவது பஸ்கா, செங்கடலைக் கடந்த அற்புதம், சீனாய் மலையில் மோசே மூலமாய்ப் பெற்ற நியாயப்பிரமாணம் ஆகியவற்றில் ஒன்றையும் இவர்கள் தனிப்பட்ட முறையில் அறிந்து ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. இந்த சந்ததியினர் அறியவேண்டிய முக்கியமான **மூன்று** காரியங்கள் இருந்தன.

- கர்த்தருடைய உடன்படிக்கை, அவரது உண்மை.
- தேவ பிரமாணங்களுக்குக் கீழ்படிவதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள், பாதுகாப்பு, வாக்குத்தத்த தேசத்தில் கிடைக்கும் செழிப்பு.

- கீழ்படியாமல் புறஜாதியாரின் வழிகளில் நடப்பதால் வரும் சாபம், அழிவு, சிறையிருப்புத் தண்டனை, சாவு.

புதிய வாக்குத்தத்த தேசத்தில் சென்று வாழுவதற்கு இவை மறுபடியும் ஞாபகப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. இவற்றை மோசே அவர்களுக்கு வழியனுப்புச் செய்திகளாக மூன்று சொற்பொழிவுகளில் தருகிறான். (1:6-4:43; 4:44-26:19; 27:1-30:20) தேவன் தமது ஜனங்களுக்கு, குறிப்பாக இந்த இளந்தலைமுறையினருக்கு திரும்பவும் ஒரு வாய்ப்புத் தருகிறார். அவர்களது பிதாக்கள் கீழ்படியாமல், முரட்டாட்டம் பண்ணி தவறவிட்டது போன்று, இந்த சந்ததியினரும் தவறிவிடக் கூடாதே! முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பே அனைவருமே வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்திருக்க வேண்டும் (2:14), "யுத்த மனிதரான அந்தச் சந்ததியெல்லாம் கர்த்தர் தங்களுக்கு ஆணையிட்டபடியே பாளயத்தின் நடுவிலிருந்து மாண்டுபோக, நாம் காதேஸ்பர்னேயாவை விட்டுப் புறப்பட்டது முதற்கொண்டு, சேரேத் ஆற்றைக் கடக்குமட்டும், சென்ற காலம் முப்பத்தெட்டு வருஷமாயிற்று"என்று மோசே சொல்லுவதைக் கவனியுங்கள்.

ஆனாலும் தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர்கள் தேவனுக்கு எதிர்த்து நின்று கலகம் பண்ணினார். எனவே, முந்தைய தலைமுறையில் அனைவரும் செத்து மடியுமட்டும் தேவன் அவர்களை வனாந்தரத்தில் அலையவிட்டார். இவர்களில் பலரும் அந்த அலைச்சல்களில் பெரும்பகுதியில் பங்கடைந்தார்கள். தனது மூன்று வழியனுப்பு உரையிலும் மோசே மூன்று காரியங்களை இவர்கள் தெளிவுற அறியும்படி எடுத்துரைத்தான்:

- கடந்த காலங்களில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களும், அவர் செய்த பலத்த செயல்களும்.
- உடன்படிக்கையில் கண்டபடி புதிய வாக்குத்தத்த தேசத்தில் இளந்தலை முறையினரது கடமைகள்.
- அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் ஆண்டவருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்து அவரை நேசித்து, கனப்படுத்துவதற்கென தங்களை முற்றிலும் பரிசுத்தப்படுத்தி பிரதிஷ்டை செய்யவேண்டும்.

தான் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படாவிட்டாலும், இளந்தலைமுறையினருக்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் தந்து, புதிய தலைவனாக யோசுவாவையும் முன்னிறுத்தி, தேவனின் திட்டப்படியே மரித்து, தேவனாலேயே அடக்கம்பண்ணப்பட்ட மோசேயின் உயர்ந்த மாதிரி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றதன்றோ!

## நான்கு பெரும்பிரிவுகள்:

உபாகமப் புத்தகத்தை நான்கு பிரதானப் பிரிவுகளாகப் பகுக்கலாம்:

**I. முன்னுரை** (1:1-4:43). இதுவே மோசேயின் முதற்சொற்பொழிவு அல்லது உரை.

இதில், சீனாய் மலையைவிட்டுப் புறப்படுதல், காதேஸ்பர்னேயாவில் விசுவாசமின்றி தேவனுக்கு விரோதமாய்க் கலகம் செய்தல், அதைத் தொடர்ந்து வனாந்தர அலைச்சல்கள், கானானின் எல்லைகளிலிருக்கும் மோவாபின் சமவெளிகளண்டையில் வந்தடைதல் ஆகியவற்றை முன்னுரையாகவும், திரும்ப ஞாபகப்படுத்தும் சரித்திரக் குறிப்புகளாகவும் மோசே தருகிறான். அதன் முடிவாக, இந்த இளந்தலைமுறையினர் தேவனுடைய **ஆசீர்வாதத்தை** அனுபவிக்கும்படி, கீழ்படியவேண்டும்; கீழ்படியாமை **சாபத்தைக்** கொண்டுவரும் என்று உறுதிப்படக்

கூறுகிறான்; அவர்கள் ஆசீர்வாதத்தையே தெரிந்து கொள்ளவேண்டும் என்பது மோசேயின் உளமார்ந்த விருப்பம் என நாம் காண்கிறோம்.

**II.கானான் தேசத்தில் வாழுவதற்குரிய பிரமாணங்கள்** (அதி.5-26). இது மோசேயின் இரண்டாம் உரை.

இந்தப்பிரமாணங்களில் சீனாய் மலையில் பெற்ற பத்து கட்டளைகளும் பிற பிரமாணங்களும் அடங்கும். யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் ஆகியவற்றில் சொல்லப்பட்டப் பிரமாணங்களில் பலவும் உபரியாய்த் தரப்பட்டுள்ளன. வாக்குத்தத்த தேசத்தில் தேவனுக்கு கீழ்படிந்து வாழுவதற்குரிய புதிய பிரமாணங்களும் இதிலடங்கும். இவை அனைத்தும் சேர்ந்த தொகுப்பே **இரண்டாவது நியாயப்பிரமாணம்** அல்லது **உபாகமம்** என நமக்குத் தரப்பட்டுள்ளது. இதில் பிரதானமாக நாம் காண்பவை இரண்டு காரியங்களாகும்:

- தேவனிடத்தில் அன்பு கூருங்கள்.
- தேவனுக்குக் கீழ்படியுங்கள்.

**தேவனிடத்தில் அன்பு கூருவதென்பது,** ஒரே தேவன், அவர் குறிப்பிடும் ஒரே இடத்தில் அவரை ஆராதிக்கவேண்டும், விக்கிரக ஆராதனை கூடாது என்பதையேக் குறிக்கிறது.

**தேவனுக்குக் கீழ்படிதல் என்பது,** அவரிடம் பயபக்தியாயிருத்தல், நீதி நியாயம் செய்தல், கொடுத்தல்; இது, தசமபாகம் கொடுத்தல், லேவியர், ஆசாரியரை பொறுப்பெடுத்துக்கொள்ளுதல், தங்களுக்கென இல்லாத ஏழை எளியவர்களுக்குக் கொடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

**III. எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடுகள்** (27:1-30:20). இது மோசேயின் மூன்றாம் உரை.

இதில் மோசே, இந்த இளந்தலைமுறையினரும் கீழ்படியாமற் போவார்கள், விக்கிரக ஆராதனை செய்வார்கள், அதனால் நாடுகடத்தப்படுதல் (சிறையிருப்பு) என்ற தண்டனை அடைவார்கள் என முன்னறிவிக்கிறான். அப்படி சிறையிருப்பில் சென்றாலும் தேவன் அவர்களை மறுபடியும் வாக்குத்தத்த தேசத்துக்குத் திருப்பிக் கொண்டுவருவார். தேவனிடம் உண்மையாய் அன்புகூர்ந்து, அவருக்குக் கீழ்படியத்தக்க புதிய இருதயத்தை அவர்களுக்குத் தருவார் என்பதையும் முன்னறிவிக்கிறான். இப்பகுதியில் வரும் **27,28 அதிகாரங்கள்** சுவராசியமானது! இந்த இளந்தலைமுறையினர் கானான்தேசத்தில் சென்று சேரும்போது செய்யவேண்டுமென மோசே சொன்ன விபரங்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கானானில் ஒன்றுக்கொன்று எதிரான **கெரிசீம், ஏபால்** என்ற இரண்டு மலைகளுண்டு. இவை சீகேமுக்கு அடுத்து உள்ளன. **சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன்** ஆகிய ஆறு கோத்திரங்களும் கெரிசீம் மலையில் ஏறி நிற்கவேண்டும். கர்த்தருக்குக் கீழ்படிவதால் வரும் ஆசீர்வாத வார்த்தைகளை அவர்கள் கூற வேண்டும். **ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி** என்ற ஆறுகோத்திரங்களும் ஏபால் மலையில் ஏறி நிற்க வேண்டும். கர்த்தருக்குக் கீழ்படியாதவர்களுக்கு வரும் சாப வார்த்தைகளை அவர்கள் கூறவேண்டும். கர்த்தருடைய உடன்படிக்கையை உறுதியாய்ப் பின்பற்றுவோம் என அவர்கள் உறுதியெடுத்துக்கொள்ளும் ஒரு திருவிழா (Ceremony) என இதனைப் புரிந்துகொள்ளலாம்.

27:14-26-ல் தேவனுக்கு விரோதமான பன்னிரண்டு பாவங்களும் 28:15-68-ல் இந்த சாபங்களுக்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. 28:1-14-ல் கீழ்படிதலுக்கு வரும் ஆசீர்வாதங்கள் தரப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின், நாங்கள்

பாவம் செய்தால் எங்களைத் தண்டியும் ஆண்டவரே ('ஆமென்' என்பதின் மூலம் தெரிவித்தல்) என்றும், நாங்கள் கீழ்ப்படியும்போது எங்களை எல்லாவிதத்திலும் ஆசீர்வதியும் ஆண்டவரே என்றும் கூறுவதற்காகவே இந்த உறுதியை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள் எனலாம்.

**IV. கடைசிச் சம்பவங்கள்:** உபாகமம் தரும் இறுதி விபரங்கள்

இப்பகுதியில் மோசே கடைசியாகச் செய்த நான்கு காரியங்களும், மோசேயின் மரண விபரமும் தரப்பட்டுள்ளன.

- மோசே யோசுவாவை தனக்கு அடுத்த தலைவனாக நியமித்தல் (அதி.31).
- மோசேயின் பாட்டு (அதி.32); இஸ்ரவேலர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாவிட்டால் வரும் சாபங்களை மோசே பாட்டாக பாடுகிறான்.
- கோத்திரங்களுக்கு மோசேயின் ஆசீர்வாத வார்த்தைகள் (அதி.33); சாபங்களை மட்டும் கூறாமல் ஆசீர்வாதங்களையும் கூறினான்.
- மோசேயின் மரணம் (அதி. 34).

கர்த்தருடைய பர்வதம் என்று அழைக்கப்பட்ட ஓரேப் என்ற சீனாய் மலைப்பகுதியில், ஒரு சாதாரண மேய்ப்பனாக யாத்திராகமப் புத்தகத்தில் அறிமுகமாகிற மோசே, இப்பொழுது 40 வருடகாலமாய் தான் நடத்திவந்த இஸ்ரவேல் என்னும் மந்தையை தனது வாரிசு என தேவன் நியமித்த யோசுவாவின் கையில் விட்டுவிட்டு நேபோ மலையில் (இம்மலை அபாரீம் என்றும் அறியப்பட்டது) பிஸ்கா என்னும் சிகரத்தில் தனியே ஏறிச்சென்று தேவனை சந்தித்து மரணமடையப் போகிறான். வாக்குத்தத்த தேசத்துக்குள் பிரவேசிக்கும் தகுதியை இழந்தாலும், அதைக் காணும் சிலாக்கியத்தை தேவன் அவனுக்குத் தந்தார். புதியஏற்பாட்டில் இயேசுவுடன் மறுரூபமலையில் மகிமையாகவே அவனை தேவன் வைத்திருந்தார் (மத்.17:1-3; லூக்கா 9:28-31). தேவனுடைய வார்த்தையின்படியே அவன் மரித்தான் (உபா.34:5). இதுவே நம் அனைவரின் வாழ்க்கையின் இலக்காக அமையட்டும்.

நூற்று இருபது வருடம் வாழ்ந்த மோசேயின் ஆயுசு நாட்கள் தீர்க்க ஆயுசு காலமே. நாமும் நமது மதியீனத்தாலோ, பாவத்தினாலோ நமது ஆயுசு நாட்கள் குறைவதற்கு காரணமாயிருக்க வேண்டாம். மோசேயின் மரணத்துடன் உபாகமம் முடியாமல் மோசே என்ற ஊழியக்காரனுக்குச் சிறந்த புகழாரத்துடன் முடிகிறது: 34:10,11,12 "மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்".

**இயேசுவைப்போல** தேவனை முகமுகமாய் தரிசித்தவனாகவும், தனது மக்களுக்காக தன்னை அர்ப்பணித்தவனாகவும், தனது மக்களுக்காக பரிந்து பேசுகிறவனாகவும், சாந்தகுணமுள்ளவனாகவும் இருந்த மோசே, தேவனுடைய ஜனங்களின் தலைவனாயிருந்தான்; நியாயப்பிரமாணங்களை தேவனிடத்திலிருந்து வாங்கித்தந்தவன்; இஸ்ரவேல் என்னும் தேசத்தை வடிவமைத்தவன்; யூத மார்க்கத்தை வடிவமைத்தவன். நமது ஊழியத்திலும் தேவனைச் சார்ந்திருந்து, தேவன் விரும்புவதைச் சாதித்து, மோசேயைப் போலவே அவரது சமுகத்தில் சென்று சேர்வோமாக!



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**
மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

**இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?**

ஒரு சமயத்தில் காலையில் எழுந்தவுடன் மக்கள் அனுதின செய்தித்தாளை வாசிப்பது உண்டு. அதில் பலவிதமான செய்திகள் காணப்படும். வசீகரிக்கும் வண்ணத்தில் தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் "டுமீல் டுமீல்" என்று சுட்டார். "சதக் சதக்" எனக் குத்தினார். "கிடு கிடு" பள்ளத்தில் மலைப்பகுதியில் பஸ் உருண்டது. வரி உயர்வு போன்றவைகளை வாசிக்கும்பொழுதே சிலருக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கும். சிலருக்கு மனதில் பயம் வரும், சிலருக்கு கவலைகளும் உண்டாகும்.

1965-ம் ஆண்டு மே மாதம் பசுமலையிலுள்ள C.S.I. சபையில் சில நாட்கள் உபதேசியாருக்குரிய பயற்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு வந்த ஒரு C.S.I.போதகர் ஒரு அருமையான ஆலோசனை கூறினார். "காலையில் எழுந்தவுடன் வேதாகமத்தை திறந்து பைபிளை வாசியுங்கள்; அது உங்களுக்கு பெலனையும், ஆறுதலையும், உற்சாகத்தையும் தரும்" என்றார். அது எனக்கு மிகுந்த சவாலாக இருந்தது. 1964-ம் ஆண்டு ஜீன் மாதம் 10-ம் தேதி பெங்களூரிலுள்ள SABI தென் ஆசிய வேதகலாசாலைக்குச் சென்றேன். 1966-ல் இது SABC கல்லூரியாக மாற்றப்பட்டது. அங்கு போனது முதல் தினமும் இரண்டு அதிகாரங்களை ஒழுங்காக வாசித்தேன். பிறகு மூன்று அதிகாரங்களையும், பின்னர் 4 அதிகாரங்களையும் (ஆதி.1, சங்.1, தீர்க்கத்தரிசிகள் 1, மத்தேயு என்று வாசித்து 4 வருடத்தில் மூன்று முறை முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்துவிட்டேன்.

1970-ல் ஒரு குறிப்பிட்ட ஊரில் ஒரு கூட்டத்திற்காக சுமார் 30 போதகர்கள் கூடியிருந்தனர். காலையில் உட்கார்ந்து கொண்டு பல கதைகளை பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது வழக்கம்போல நான் வேதாகமத்தை வாசித்துக்கொண்டு இருந்தேன். அதில் ஒரு ஊழியர் என்னை கிண்டல் செய்தார். பிற்காலத்தில் அவரும் வேதாகமத்தை அதிகமாக வாசிக்க ஆரம்பித்தார்.

**ஒரு வேதப்பகுதியை வாசிக்கையில் கீழ்கண்ட காரியங்களை மனிதில் வைத்து வாசித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்**

**❖ பைபிளை ஜெபத்துடன் வாசிக்க வேண்டும்**

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் (சங்.119:18).

**❖ பரிசுத்தாவியானவரின் உதவியை நாட வேண்டும்**

"நான் பேசுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63).

**❖ பைபிளை அனுதினமும் வாசிக்க வேண்டும்**

வேதம் வாசித்தலும், ஜெபமும் இரண்டு கண்களாக இருக்க வேண்டும்.

வேதம் வாசிக்கும்பொழுது கடவுள் உங்களுடன் பேசுவார். ஜெபிக்கும்பொழுது நீங்கள் தேவனிடம் பேசுவீர்கள். "வேதத்தை நேசிப்பவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு" (சங்.119:165).

**❖ பைபிளை வாசிக்கையில் கீழ்கண்டவைகளை மனதில் வையுங்கள்**

நான் வாசித்தது வரலாறா? கதையா? உவமையா? செய்யுளா? அல்லது நடந்த சம்பவமா? ஊத்ஸ் தேசத்திலே யோபு என்றும் பெயர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான் (யோபு 1:1).

**❖ பைபிளை வாசித்தப் பகுதியில் பிதா, குமாரன், பரிசுத்தாவியைக் குறித்து என்ன கூறுகிறது?**

"பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்"... (1 பேதுரு 1:2 இந்த வசனம், யெகோவாவின் சாட்சிகள் , இயேசு நாமத்தார் போன்றவர்களுக்கு சிறந்த பதிலாகும்.

**❖ எனக்கு கடவுள் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?**

''இதோ என் உள்ளங்கையில் உன்னை வரைந்திருக்கிறேன்'' (ஏசாயா 49:16).

**❖ பைபிள் எனக்கு கொடுக்கும் எச்சரிப்பு என்ன?**

"உன் பாவங்களினால் என்னை சங்கடப்படுத்தி உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய்" (ஏசாயா 43:24).

மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்கிறார் (எரேமியா 17:5).

போர் வீரன் ஒருவர் ஒரு ஆலயத்தில் கிறிஸ்தவ பாடல் சத்தம் கேட்டு, அவர் உடனே உள்ளே சென்று தேவசெய்தியை கேட்க ஆரம்பித்தார். அவருக்கு அருகாமையிலுள்ள மிஷனரி போர்வீரரை பார்த்து, "நீங்கள் கிறிஸ்தவரா?" என்று கேட்டார். உடனே அவர் "ஆம்" என்று பதிலளித்தார். மறுபடியும் அவரிடம் நீங்கள் யார் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த மிஷனரி "என் தாயின்" மூலம் என்றார். உங்கள் தாய் யார் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் என மிஷனரி கேட்டார். அதற்கு அந்த போர்வீரன் "புத்தக விற்பனையாளர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தபோது வேதாகமத்தை எங்கள் வீட்டில் மறந்து விட்டுப்போய்விட்டார். அதை என் தாய் வாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டார். எங்கள் வீட்டில் மொத்தம் 14 பிள்ளைகள் இருந்தோம். அனைவரும் அந்த வேதபுத்தகத்தை வாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டோம் என கூறினான்". உங்கள் அம்மா எங்கே வசிக்கின்றனர் என்றார் அந்த ஊழியர். அம்மா வெகு தூரத்தில் இருக்கின்றார்கள், ஒரு பிரசங்கியின் பிரசங்கத்தையும் கூட கேட்டதில்லை. நீங்கள் அவரை சந்தித்தால் மிகவும் சந்தோஷமடைவார்கள் என்றார் அந்த வீரன். வீட்டில் விட்டு சென்ற ஒரு பைபிள் மூலம் அந்த தாயும், 14 பிள்ளைகளும் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக!

# உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் நிலையை சோதித்தறியுங்கள்!!

| ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை | ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய வாழ்க்கை |
|---|---|
| ஊக்கமான ஜெபம் | மந்தமான ஜெபம் |
| வேதம் வாசித்தல் இனிமையானது | ஆர்வமில்லாத வேத வாசிப்பு |
| கர்த்தரில் முழுமையான நம்பிக்கை கொண்டிருத்தல் | பதட்டத்துடனும், சந்தேகத்துடனும் இருத்தல் |
| மற்றெல்லாவற்றையும் விட கர்த்தரை சேவித்தல் | கர்த்தரைவிட இவ்வுலக காரியங்களை அதிகமாக நேசித்தல் |
| பாவத்தை எதிர்த்தலும் வெறுத்தலும் | பாவத்தோடு சமரசம் செய்தல் |
| அனைத்திலும் தேவனை மகிமை அடையச் செய்தல் | அனைத்திலும் தற்பெருமையைத் தேடுதல் |
| இருதயத்தில் சமாதானத்துடன் இருத்தல் | இருதயத்தில் கவலை கொள்ளுதல் |
| அனைத்திலும் நன்றி செலுத்துதல் | எப்பொழுதும் முறுமுறுத்தல் |
| எப்போதும் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருத்தல் | எப்போதும் வருத்தத்துடனும் பெருமூச்சுடனும் இருத்தல் |
| உபத்திரவத்தில் அமைதியுடனும் பொறுமையுடனும் இருத்தல் | எளிதில் கோபம் கொள்ளுதல் |
| மற்றவர் நலத்தில் கருத்துடன் இருத்தல் | சுயநலத்தில் கருத்தாய் இருத்தல் |
| அனைத்திலும் தேவனுக்குரியதைத் தேடுதல் | எப்போதும் சுகபோக நாட்டத்துடன் இருத்தல் |
| ஆவிக்குரிய காரியங்களில் வாஞ்சையுடன் இருத்தல் | இதயத்தில் இவ்வுலக காரியங்களை இச்சித்தல் |
| பிறரைத் திடன் கொள்ளச் செய்யும் வார்த்தைகளைப் பேசுதல் | பிறரைக் குறை கூறும் வார்த்தைகளைப் பேசுதல் |
| கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் மகிழ்ந்திருத்தல் | சாட்சியாய் இருக்க வல்லமை இழந்து கவலைப்படுதல் |
| கர்த்தரின் ஊழியத்திற்கு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தல் | உற்சாகமில்லாமலும், விருப்பமற்று கொடுத்தல் |
| பிறர் வெற்றியடையும்போது களிகூறுதல் | பிறர் வெற்றியைப் பார்த்து பொறாமை கொள்ளுதல் |
| பிறரின் துன்பத்தில் உதவிக்கரம் நீட்டுதல் | பிறர் துன்புறும் போது கண்டு கொள்ளாமலிருத்தல் |
| மன்னித்தலை விரும்புதல் | மன்னிக்க விரும்பாமலிருத்தல் |
| குணநலனுக்கு (நல் நடத்தைக்கு) முக்கியத்துவம் அளித்தல் | உடுத்துதலுக்கு முக்கியத்துவம் அளித்தல் |
| பிற பக்தியுள்ள கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் | உலக பிரமான நண்பர்களுடன் நட்புக்கொள்வதில் மகிழ்ச்சியடைதல் |
| கடிந்து கொள்ளுதலை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல் | புகழ்ந்து பேசும் வார்த்தைகளை மட்டும் விரும்புதல் |
| கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் | கர்த்தருடைய வருகையைக் குறித்து சிறிதும் சிந்திக்காது இருத்தல் |



# மனித நேயம் இல்லாமல் எழுப்புதல் எங்கே?


**Rev. R. தாசையா**

தேனி மண்டல தலைமை போதகர்


யோபு 24:2-12 வசனங்களை கருத்தாய் வாசித்தால் ஏழை எளியவரோடு நாம் கொண்டிருக்கும் அணுகுமுறையை வைத்தே நமது ஆன்மீகத் தன்மை எத்தகையது என்பதை அறிய முடியும். இன்றைய காலக்கட்டத்தில் **வார்த்தையை பேசுவதா? அல்லது வாழ்ந்து காட்டுவதா?** என்பதே கேள்வி. இயேசுவைப்பற்றி கூறும் சமயத்தில் (அப்.1:2), அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கியதைப் பற்றி வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தையை இடைவிடாமல் நம்மில் பலரும் பல தடவை பேசிக்கொண்டிருப்பதில் அளவு கடந்த ஆசை காட்டுகிறோம். பேசின வார்த்தைக்கு செயல் கொடுத்திருக்கிறோமா? வடிவமாக உருவம் கொடுத்திருக்கிறோமா? **அது செயல் அளவில், வடிவத்தில் கண்பார்த்து பேசப்படும் இடத்தில் இருக்கிறதா?** என்பதை உலகம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. பேசுகின்ற நாமோ அதைப்பற்றி சிந்திப்பதும் இல்லை, யோசிப்பதும் இல்லை. காரணம், மிகுதியான வேலை மற்றும் ஊழியம் செய்வது மாத்திரமே எனது கடமை என்று அசட்டையாக இருக்கிறோம். தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்ற தேவபயத்துடன் வாழ முயற்சி எடுப்போம்.

யோபு சொல்லுகிற இத்தகையோரிடம் **தேவன் கரிசனை கொண்டவராக** இருக்கிறார் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. யோபு துன்மார்க்கர் செய்யும் காரியங்களை பட்டியலிடுகிறார். யோபு மனிதநேயம் படைத்தவர் என்பதை இந்த புஸ்தகத்தில் ஏராளம் படித்து அறிந்து கொள்ளலாம். நமது வாழ்வில் மனித நேயமற்ற செயல்களை அறவே ஒழிக்க வேண்டும். அன்பும், கருணையும், பரிவும், இரக்கமும் இல்லாமலேயே வாழ்ந்து கொண்டு வேதத்தை பிரசங்கித்தால், வேத வார்த்தையை அறிந்திருந்தால் அல்லது எழுப்புதலுக்காக ஜெபம் செய்தால் **எழுப்புதல் வந்துவிடுமா?** நம்மில் எத்தனை பேர் தேவனையும் நம்மையும் நேசிப்பதுபோல், சகமனிதர்களை நேசிக்கும் உண்மையான மனிதநேயம் உடையவர்கள்? நமது மனித நேயம் எப்படிப்பட்டது என்றால், மத்தேயு.5:46,47 இந்த வசனத்தின்படி இருக்கிறது. இதை மாற்ற முயற்சி எடுக்காமல், என்னதான் காரியங்களை செய்தாலும் எழுப்புதல் வருவது தாமதமாகும். **நாம் முதலாம் கற்பனையைக் கைக்கொள்ளாமலேயே கடைசி கட்டளையை நிறைவேற்ற துடிக்கிறோம்** (மத்தேயு.22:37,38,39; மத்தேயு.28:18-20).

ஏசாயா 1:13-17-ல் முக்கியமாக சக மனிதர்களுக்கு நன்மை செய்வதும், எந்தவிதத்திலும் அவர்களுக்கு அநியாயம் செய்யாமல் நியாயத்தை தேடித் தருவதும், ஒடுக்கப்பட்ட மனிதனுக்கு ஆதரவு காட்டுவதும், சபையில், கிறிஸ்தவத்தில், திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவைகளை விசாரிப்பதும், கவனிப்பதும் அவர்களுக்கு செய்யும் உதவி மனிதநேயம் அல்லவா !!

நமது ஆராதனைகளை விட, பண்டிகையின் கோட்பாடுகளை விட ஏன்? நமது ஜெபத்தை விட இதுதான் முக்கியம். இதை செய்து விட்டு ஜெபித்தால் எழுப்புதல் வரும்.

**இயேசுவும் கூட மனித நேயத்தை முதலிடத்தில் பேசிவிட்டு ஜெபத்தை இரண்டாவது இடத்தில் கூறுகிறதை வாசிக்கிறோம்** (மத்தேயு 6:1-5). கொர்நேலியு

ஜெபிக்கிறவனாக மாத்திரம் அல்ல, தானதர்மங்களை செய்யும் மனித நேயம் உடையவனாக இருந்தான். எனவே அவன் ஜெபத்துக்கு எழுப்புதல் வந்தது (அப்.10:1-4). தேவன் அவனது மனிதநேயத்தை பாராட்டினார்.

ஏசாயா 58:5-7-ல் ஜெபத்தைப்பற்றி பேசினாலும் அந்த ஜெபத்திற்கு எழுப்புதல் உண்டாக, அங்கே மனித நேயத்தை வலியுறுத்தி பேசுகிறார். முக்கியமாக 7-வது வசனத்தில் **பசி உள்ளவனுக்கு ஆகாரத்தை பகிர்ந்து கொடுப்பதும் சிறுமையானவனை வீட்டிலே சேர்த்துக் கொள்வதும், வஸ்திரம் இல்லாதவனுக்கு வஸ்திரம் கொடுப்பதும், மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலும் இருப்பதே மனிதநேயம்.** இந்த மனித நேயம் இல்லாமல் ஜெபித்து என்ன செய்ய?... எங்கு பார்த்தாலும் எதிலும், எல்லாவற்றிலும், எதற்கும் ஜெபம் செய்கிறோம் ஆனால் பதில் இல்லை. தேவன் தனது மனதை கல்லாக வைத்துக் கொள்கிறார். திருச்சபையில் உள்ள மக்களிடமும், ஊழியர்களிடமும், மனித நேயத்தை இயேசு அதிகமாக எதிர்பார்க்கிறார்.

**( உபவாசம் - தேவனோடு வாசம்; மனித நேயம் - மனிதர்களோடு வாசம்).**

தம்மோடு இருக்க (மாற்கு3:14,15) - அனுப்பினார் மனித நேயத்தை காட்ட...

மனித நேயத்தோடு ஒருவனின் கடன் மன்னிக்கப்பட்டது. மன்னிக்கப் பட்டவனோ தனக்கு கடன் கொடுக்க வேண்டியவனின் கழுத்தை பிடித்து மனிதநேயமற்று நெறித்தான் என்று பார்க்கிறோமே. தேவன் உங்களுக்கும், எனக்கும் இரங்கியது போல நாமும் சக ஊழியர்களுக்கு, சக மனிதனுக்கு, சக கிறிஸ்தவனுக்கு இரங்கவேண்டாமா? **எழுப்புதல் எங்கே?** (மத்தேயு 18:23-34)

எபிரெயர் 13:15,16-ல் துதி-தேவனுக்கு, தான தர்மம்-மனிதனுக்கு. தேவனை துதிக்க, ஆராதிக்க, ஸ்தோத்தரிக்க அதிக நேரம் கொடுக்கிறோம். ஆராதனை நாம் தேவனை நேசிக்கிறோம் என்பதை காட்டுகிறது. தான தர்மம், நன்மை செய்வது மனிதர்களின் மேல் நாம் வைக்கும் கரிசனை, இந்த கரிசனையில்லாத ஊழியங்களில் எழுப்புதல் இருக்காது. தேவனை உயர்த்தி பாடுகிறவன், துதி ஆராதனை நடத்துகிறவன் வாழ்க்கையில் மனிதநேயம் கொண்டவனாக வாழவேண்டும். நாம் மட்டும் சந்தோஷமாயிருந்தால் போதாது பிறரது சந்தோஷத்தில் உதவிகரம் நீட்ட வேண்டும். மனிதர்களிடம் மனித நேயத்தோடு நடக்க வேண்டும். யோபு பக்தன் (யோபு 29:13).... **விதவைகளின் இருதயத்தை கெம்பீரிக்க பண்ணினேன்** என்கிறார்; இதுதான் மனிதநேயம்.

நாம் அனைவரும் கர்த்தருக்கு, சபைக்கு, ஊழியங்களுக்கு கொடுக்க மிகுதியான நாட்டம் காட்டுவோம். ஆனால் ஏழைகளுக்கு, நமக்கு அருகாமையில் இருக்கும் குடிசை வீட்டுக்காரனுக்கு, நிலம் இல்லாமல், கட்டிடம் இல்லாமல், வாகனம் இல்லாமல் கஷ்டப்படும் ஊழியனுக்கோ, அந்நியனுக்கோ உதவ மனதில் இடம் இல்லை, **காரணம்** என்ன? **மனிதநேயம் இல்லை.** லூக்கா 6:38-ல் வாசிக்கும் கொடுங்கள் உங்களுக்கும் கொடுக்கப்படும் என்ற வார்த்தை குறிப்பாக மற்றவர்களுக்கு கொடுக்கும் மனித நேயத்தை கூறுகிறது. இதை நம்மில் பெரும்பாலானோர் ஊழியத்திற்கு கொடு. ஊழியருக்கு கொடு, சபைக்கு கொடு என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். நீதிமொழிகள் 19:17-ல் **ஏழைக்கு இரங்கு "மனிதநேயம்"**, மத்தேயு 23:23 **தேவனுக்கு கொடுப்பது போல் ஏழைக்கு கொடுப்பதின் மூலம் மனித நேயத்தை காட்டவேண்டாமா?** என்று இயேசு மாயக்காரர், வேதபாரகர், பரிசேயர் இவர்களை கடிந்து கொண்டார். **(இதில் நீங்கள் யார்?).**

ஏசாயா 61:1-3-ல் சுவிசேஷத்தை சொல்லும் அளவுக்கு மனித நேயம் காட்டப்படாததினாலே **ஆத்தும அறுவடை போதிய அளவு இல்லை.** வெறும்

சுவிசேஷத்தை கொண்டுபோகும் நம்மை யாரும் நம்புவதற்கு ஏதுவாக இல்லையே. சமூகத்தில் அடித்தட்டில் வாழ்பவர்களுக்கு நாம் என்ன உதவி செய்திருக்கிறோம்? **இப்படியே அனுப்பிவிட்டால் சோர்ந்து போவார்களே! இது மனிதநேயம் அல்லவா?** மத்தேயு 15:32-37...

**நெகேமியா காலம் ஓர் எழுப்புதலின் காலம், அதோடு சமூக சீர்திருத்த காலம்,**, மனித **நேயத்தின் காலம்,** 3,4 அதிகாரங்கள்-மதில் கட்டுதல்-இது ஆன்மீகம் சம்மந்தமானது. 5-வது அதிகாரம்-மனித நேயம் கொண்ட சமூக சம்மந்தமானது-தனது சொந்த தியாகத்தால் எளியவனுக்கு உதவுதல், அந்த ஜனங்களின் அன்றாட வாழ்வை நிதானித்து மனித நேயத்தை காட்டியதால் அவன் ஜெபித்த, எடுத்த காரியங்கள் **52 நாளிலேயே செய்து முடிக்கப்பட்டது** இதுவே எழுப்புதல். (யாக்கோபு 2:2-4, யாக்கோபு 2:15-16)

ஆதிசபையின் எழுப்புதலில் முதலாவது வருவது **வாரி வழங்கும் மனிதநேயம்** (அப்.2:44-45; அப்.2:15,16). இருந்தவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்தார்கள். எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் மனிதநேயம். அமெரிக்கா, இங்கிலாந்து, லண்டன், ஸ்காட்லாந்து ஆகிய தேசங்களிலிருந்து வந்த அத்தனை மிஷனெரிகளும் முதலாவது இந்தியர்களிடம் காட்டிய மனித நேயமே. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், பொதுநல சேவைகள் இவைகள் தான் மக்களை இயேசுவிடம் கொண்டு வந்தது. **இயேசு உங்களை நேசிக்கிறார் எனவே நாங்களும் உங்களை நேசிக்கிறோம் என்று மனித நேயத்துடன் கூடிய சுவிசேஷமே...** அன்று தங்களுக்கு உண்டானவைகளை தேவைக்கு கொடுத்தார்கள் அது மனித நேயம், இன்றுள்ள கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் தங்களுக்கென்றே சேர்க்கின்றார்கள் இது சுய நலம்.

இன்று அன்னை தெரசாக்களை போன்றவர்கள் தேவை. **தமிழ் நாட்டில் இன்று ஏஜி என்ற ஸ்தாபனம் இருக்கிறதென்றால் ஐயா எட்வர்ட்ஸ், டாரீஸ் எட்வர்ட்ஸ் அம்மா இவர்களின் தியாகமே.** வடகரோலினாவிலுள்ள ஈடின்டன் இடத்தில் ஐயா அடக்கம் பண்ணப்பட்டார். அவர் கல்லறையில் இன்றும் எழுதப்பட்ட வார்த்தை **"If I had another life to live I would give it to India - வாழ ஒரு வாழ்வு கொடுக்கப் படுமானால் அதை இந்தியாவுக்கே கொடுப்பேன்."** மனிதநேயம் கிராமங்களை தேடிச்சென்று, ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி கூடமும், தொழில் கூடமும், வேதாகம கல்லூரிகளும், திருச்சபைகளையும் கட்டி முடிக்கச் செய்தது. கிறிஸ்துவின் அன்பு மனிதர்களை நேசிக்கச் செய்தது , மனிதநேயத்தை காட்டியதே இத்தகைய வளர்ச்சி.

**படு வேதனையில் பரம வெற்றி** நூலின் ஆசிரியர் **ரிச்சர்ட் உம்ராண்ட்** (1909-2001) சிறையில் ஒவ்வொரு பத்தாம் நாளும் அவருக்கு கொடுக்கப்படும் அனுதின சூப்பை அவரை விட பெலன் குன்றினவர்களுக்கு, சிறைக்கைதிகளுக்கு கொடுத்து விடுவாராம். ஒவ்வொரு பத்தாவது வாரம் அவருக்கு கிடைக்கும் வாராந்திர ரொட்டியை அவரை விட சரீரத்தில் மெலிந்து காணப்படுபவர்களுக்கு கொடுத்துவிடுவாராம். இதுதான் மனிதநேயம். எனவே அவரது வாழ்க்கையை இன்று உலகமே உற்று நோக்குகிறது. நல்ல சமாரியன் சம்பவமும் மனிதநேயத்தையே வலியுறுத்துகிறது (லூக்கா 10:30-38).

- **உன்னால் இயன்ற நன்மை அனைத்தையும் செய்,**
- **உன்னால் முடிந்த அனைவருக்கும் செய்,**
- **உன்னால் இயலும் அனைத்து இடங்களிலும் செய்,**
- **உன்னால் முடியும் அனைத்து வழிகளிலும் செய் –** தேவ மனிதர் ஜான் வெஸ்லி

**மனித நேயம் உள்ளவர்களாய் காணப்படுவோம்.**

**இயேசுவருகிறார் மாரநாதா.. அல்லேலூயா...**



# முதல் வரிசை விசுவாசிகள்


**Rev. J. தேவதாசன் கலையரசன்**

Regional Overseer, North Central Region


ஐந்து அப்பங்கள், இரண்டு மீன்களைக் கொண்டு இயேசுகிறிஸ்து 5000-க்கு அதிகமானோரை போஷித்த அற்புத சம்பவம் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது. முழுமையான சித்திரத்தை அறிய ஒரே நேரத்தில் இந்த நான்கு வேதபகுதிகளையும் ஒப்பிட்டு படிப்பது நல்லது. எப்போதும் இந்த அற்புதத்தில் அந்த சிறுவனை நாம் மெச்சிக் கொள்வதுண்டு. உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று இயேசு கேட்டபோது (மாற்கு 6:38) இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என அந்திரேயா சொன்னார் (யோ.6:9) அந்தப் பையன் கையிலிருந்து வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டதுபோல பதிவு செய்யப்படவில்லை, எனவே அச்சிறுவனின் தியாகம் போற்றுதலுக்குரியது.

அதேசமயம் அச்சிறுவனை கண்டுபிடித்து, அவனைக் கொடுக்கச் செய்த அந்திரேயா அப்பையனைவிட மேலானவன் இல்லையா என்பாரும் உண்டு. மறுக்க இயலாதுதான். ஆனால் இந்த அற்புதத்தில் மறக்கமுடியாத இன்னொரு கதாபாத்திரமும் உண்டு. ஆம்! பந்திபந்தியாய் அமர்ந்த 5000 புருஷர்களிலும் முதல்வரிசையில் அமர்ந்தவர்களும் விசேஷமானவர்களே இவர்களின் தியாகம் குறித்து என்றாவது யோசித்திருக்கிறீர்களா! முதல்வரிசை பந்தியில் அமர்ந்தோரின் சிறப்புத்தன்மைகளை அறிவது, பலபுதிய பாடங்களை நமக்குக் கற்றுத்தரும்.

## I. அற்புத சம்பவத்தின் சுருக்கம்

(நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டவைகளின் தொகுப்பு)

இச்சம்பவத்தையொட்டி இயேசுகிறிஸ்து செய்த முழு ஊழிய விவரங்களும் இந்த குறிப்பிட்ட வேதபகுதிகளுக்குள் விபரமாக இல்லை. ஆனால் நீண்டநேரம் பிரசங்கம் செய்து பிணியாளிகளை சுகமாக்கியிருக்க வேண்டும் (மத்.14:13,14). அப்போதிருந்த அச்சூழலின் தன்மையை, தேவையை சீஷர்கள் நன்குஅறிந்து இருந்தார்கள். சாயங்காலமாகிவிட்டது, இனி உணவு தயாரிக்கவும் முடியாது, கொள்ளவும் முடியாது.

சிறுவன் மூலம் 5 அப்பங்களும், 2 மீன்களும் கிடைத்திருந்தாலும் அது இத்திரள் கூட்ட ஜனங்களுக்கு போதாது. கொஞ்சம் கொஞ்சம் பகிர்ந்து கொண்டாலும், 200 பணத்திற்கு ரொட்டி கொள்முதல் செய்தாலும் பெருந்திரள் மக்களுக்கு போதாது. சிறந்த யோசனை என்னவெனில் அவர்களை அனுப்பி விடுவதேயாகும்.

அதைத்தான் அவர்கள் இயேசுவிடம் சொன்னார்கள். “அவர்களை அனுப்பிவிடும்” என்றார்கள். அவரோ தாம்செய்யப்போவதை முன் அறிந்தும், அவர்களின் விசுவாசத்தை சோதிக்கும் கேள்விகளைக் கேட்டதுடன், நீங்களே அவர்களுக்கு போஜனங்கொடுங்கள் என்றார். அதைக் கேட்டு திகிலடைந்திருக்கக் கூடும். அவர்களின் அச்சத்தை அகற்றும் விதத்தில் உங்களிடத்தில் எத்தனை

அப்பங்களுண்டு என்று கேட்டதும் ஏதோ ஒரு அற்புதம் நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பை சீஷர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்கக்கூடும். அதேசமயம் இனி எல்லாமே அவர் பார்த்துக் கொள்வார் என அவர்களால் நிம்மதியடையவும் முடியவில்லை. ஏனென்றால் **நீங்களே போஜனங்கொடுங்கள்** என்று சொல்லியிருந்தாரே, இப்போது ஜனங்களை 50, 50 பேராக பந்தியில் அமர்த்த சீஷர்களுக்கு கட்டளையிட்டார் (லூக் 9:14). ஜனங்கள் அவ்விதமே அமர்ந்தார்கள் (மாற்கு 6:40) அவர்கள் ஒழுங்கும் கிரமமாக, பந்திபந்தியாய் அமர்ந்த பின்பே இயேசுகிறிஸ்து அப்பங்களையும், மீன்களையும். ஆசீர்வதித்து சீஷர்களிடத்தில் கொடுத்தார். அவர்கள் பங்கிட்டபோது 5000க்கு அதிகமாக மக்கள் திருப்தியாக சாப்பிட்டார்கள் (மத்.14:21) மீதி துணிக்கைகளையும் 12 கூடைகளில் எடுத்தார்கள். (மத்.14:20)

## II. முதல் வரிசை பந்தியில் அமர்ந்தோரின் சிறப்பு

சற்று யோசித்துப் பாருங்கள் முதல் வரிசைப் பயனாளிகள் திரும்ப திரும்ப பந்தி விசாரிப்பவர்களை தொந்தரவு செய்து அப்பம், மீன் என்று தங்களுக்கு தேவையானவைகளை கேட்டு கொண்டேயிருந்தால் எப்படி கடைசி வரிசை மனிதர் வரை சந்திக்கப்பட்டு இருப்பார்கள். ஆகவே அப்பம் கொடுத்த ஒரு பையன் மட்டுமல்ல, அந்திரேயா மட்டுமல்ல, முதல் வரிசைக்காரர்களும் இந்த அற்புத செயலில் பங்குபெற்றவர்களே.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய செய்தி என்ன? ஆஸ்வால்டு ஸ்மித் இச்சம்பவத்தைப் பற்றிக் கூறும்போது, முதல் வரிசை மக்களுக்கு அப்பம் திரும்பத் திரும்ப கொடுக்கப்படுகிறது என வேதனைப்படுகிறார். அதாவது சுவிசேஷம் கேட்டவர்கள், இயேசு கிறிஸ்துவை ஏற்கெனவே ஏற்றுக் கொண்டவர்கள், முதலாவது சபைக்கு வந்தவர்கள் என முதல் வரிசைக்காரர் களுக்கே கிறிஸ்தவ ஊழியத்தின் அத்தனை பணங்களும், ஊழியங்களும் நேரங்களும் விரயமாகிறது என்பது அவரது வேதனை. கேட்டவர்களே திரும்ப திரும்ப கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 40சதவீத மக்களுக்கு ஒருமுறைகூட சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. கேட்டவர்களோ தெவிட்டுமளவு, “ஆழமான வேத ஆராய்ச்சி” செய்ய விரும்புகிறார்கள். இன்றைக்கு முதல் வரிசைக்காரர் செய்வதைப் பார்த்தால், அந்நாளைய முதல் வரிசைக்காரர் போற்றுதலுக்குரியவரே.

### அவர்களின் சிறப்பு

1. முதல் வரிசைக்காரர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அப்பத்துண்டுகளில், மீன்களில் திருப்தியடைந்தார்கள்.
2. போதாமல் போய்விடுமோ என்ற பயத்தில் இரண்டாம் வரிசைக்கு போகவிடாமல் பரிமாறுபவர்களைத் தடையசெய்யவில்லை. முதன்முதல் சபைகளில் சேர்ந்த சிலர் “எங்கே போதகரின் கவனம் புதியவர்களிடம் போய்விடுமோ என்ற பயத்தில் தங்களையே திரும்பதிரும்ப விசாரிக்க வேண்டும்’ என எத்தனை சபைகளில் விசுவாசிகள் போராடுகிறார்கள் பாருங்கள்.
3. முதல் வாரிசைக்காரர் தங்களிடம் கொடுக்கப்பட்ட அப்பத்தின் எண்ணிக்கை அல்லது அளவுகளைப் பார்க்கவில்லை. அவர்களுக்குத் தெரியும் மோசேயின்

காலத்திலே குறைந்த அளவு மன்னாவைச் சேகரித்தவர்களும் போதுமான அளவு நிறைவான ஆகாரம் பெற்றார்களே, பசி ஆறினார்களே! ஆகவே அப்பத்தின் அளவுகளில் கவனம் செலுத்தாமல் அப்பத்தை ஆசீர்வதித்துக் கொடுத்தவரையே பார்த்தார்கள்.

4. கடைசிவரிசை மனிதரும் அப்பம் கிடைக்கப் பெற தாங்கள் பசியாறியவுடனே, வரிசையைக் கலைக்காமல் பொறுமை காத்தவர்கள்தான் இந்த முதல் வரிசை மனிதர். எத்தனை அற்புத மனிதர்கள் இவர்கள்!

## III. படிப்பினை

1. முதலாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களான முதல் வரிசைக் கிறிஸ்தவர்களான நீங்கள், தங்கள் பசி ஆற்றப்படுவது மட்டுமல்ல, உங்களுக்குப் பின்வரிசையில் பசியால் துடித்துக் கொண்டிருக்கிறவருக்கு உதவிட திட்டமிடுங்கள்.
2. உங்கள் பின்வரிசைக்காரரின் பசி, குமுறல் உணரும் மென்மையான இருதயம் உங்களுக்கு உண்டாகட்டும்.
3. அவர்களின் 'பசி' உங்களது ஜெபக்குறிப்பானால், உங்களிடமே போஜனம் கொடுக்கும் பொறுப்பை தேவன் கொடுப்பார்.
4. ஒரு அந்திரேயா, ஒரு சிறுவன் தங்களுடையதைக் கொடுத்தபடியால்தானே முதல் வரிசையில் அமர்ந்துள்ள உங்களுக்கும் போஜனம் கிடைத்தது.
5. நீங்கள் பின்வரிசைக்காரரை பொருட்படுத்தாமல் 'நான் மட்டும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்' என்று குறியாக இருந்து, பரிமாறுபவர்களை உங்களுக்கே ஊழியம் செய்ய நிர்பந்தித்துவிடாதீர்கள்.
6. கடைசி வரிசைக்காரரும் போஷிக்கப்பட்டு, 12 கூடை மீதம் எடுக்கும் அளவு பெருகச் செய்கிற தேவனின் அற்புதம் பூர்த்தியாக வேண்டுமானால், சிறுவன், அந்திரேயா மற்றும் விசுவாசத்துடன் பங்கிட்டுக் கொடுத்த அப்போஸ்தலர்கள் மட்டுமல்ல முதல்வரிசையில் அமர்ந்து சாப்பிடும் முதல் வரிசை கிறிஸ்தவரான உங்கள் தியாகத்தின் பங்கும் முக்கியமானதே. இயேசுகிறிஸ்துவின் மாபெரும் அற்புதம் பின்வரிசைக்காரர் வரை செல்லட்டும். இயேசுவே ஆண்டவர் என அவர்களும் அறிக்கையிடட்டும் (யோவான் 6:14).

---


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 4200664**



# கனத்துக்குரிய பாத்திரம்


**Rev. C.P. சாலமோன்**

கடலூர் மண்டல ஆண்கள் ஐக்கிய பொறுப்பாளர்
பவர் ஆஃப் ஜீசஸ் ஏ.ஜி. சர்ச், புவனகிரி


"தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால் பயன்படுத்தப்படுவான், அவன் கனத்துக்குரிய பாத்திரமாய் இருப்பான்" (2 தீமோ. 2:21).

## முன்னுரை

கனத்துக்குரிய பாத்திரமாய் இருப்பவன், பொல்லாத வழியைவிட்டு விலகி, தேவனுக்கு அர்ப்பணித்து, தேவ வார்த்தையை உறுதியாய் பிடித்து, விசுவாசித்து தேவன் கொடுக்கும் வாய்ப்பை பயன்படுத்துவான். ஒரு நல்ல தலைவனுக்கு உண்டான எல்லா தகுதியும் பெற்ற ஒரு வேத பாத்திரம் காலேப், அவரைக்குறித்து பார்ப்போம்.

யார் இந்த காலேப்? யூத கோத்திரத்தான் (எண்.13:6). காலேப் என்றால் திராணியுள்ளவன் என்று அர்த்தம், இவன் ஒரு நல்ல போர்வீரனும் கூட. எபே.6:13,14-ன்படி தீங்கு நாளில் அவைகளை எதிர்த்து நிற்கிறவன், சகலத்தையும் செய்து முடிப்பவன், தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொள்பவன் என இவை அத்தனை தகுதியையும் நாம் காலேப் வாழ்வில் பார்க்க முடிகிறது. கானான் தேசத்தை சுற்றி (வேவு) பார்க்க சென்ற 12 தலைவர்களிலும் சிறந்தவர் இந்த காலேப். (எண்.13:1-6) காலேபின் வாழ்வில் இருந்து நாம் (குடும்ப தலைவர்கள்) கற்றுக்கொள்ள வேண்டியதை இன்று தியானிப்போம்.

### 1. தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றிய காலேப் :

கர்த்தரை உத்தமமாய் பின்பற்றிய காலேபுக்கு கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம் (யோசுவா 14:9,14). அவன் மிதித்து வந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்று ஆணையிட்டார் (உபாகமம் 1:36). ஒரு குடும்பத் தலைவன் தேவனை உத்தமமாய் பின்பற்ற வேண்டும். நாம் கர்த்தரை பின்பற்றும் வாழ்க்கையை வாழும்பொழுது நம் பிள்ளைகளும் அதை கற்றுக்கொள்கிறார்கள். அவர்களும் தேவனை தேடி தேவனை பின்பற்றுவதால் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுகொள்கிறார்கள். உத்தமமாய் கர்த்தரை பின்பற்றினால் தேவன் நம்மோடு கூட நம் சந்ததியையும் ஆசீர்வதிப்பார்.

### 2. நேர்மறையான (Positive Minded) சிந்தையுள்ள காலேப் :

எண்.13:28,29,33-காலேப் உடன் வேவு பார்க்க போனவர்கள் அந்த தேசத்தின் சூழ்நிலையையும், ராட்சத மனிதர்களையும் பார்த்து பயந்து அவர்களை ஜெயிக்க முடியாது என்னும் துர்ச்செய்தியை பரப்பினார்கள். எதிர்மறையான (சாத்தியம் இல்லை என்னும்) சிந்தையை ஜனங்களிடம் கொண்டு வந்தார்கள். எண்.13:30 கர்த்தர் மேல் உள்ள விசுவாசத்தில் காலேப் எளிதில் ஜெயிப்போம் என்னும் நற்செய்தியை (Positive) கூறினான். நல்ல தலைவன் எதிர்மறையான சூழ்நிலையிலும் கர்த்தர் நம்மோடு இருப்பதால், நடக்கும், முடியும், சாத்தியமாகும் என்னும் நேர்மறையான வார்த்தையை பேச வேண்டும். மாமிச பார்வையில் நாம் பார்க்கும்போது சாத்தியம் இல்லை. எதிர்மறையாக தான் தெரியும். ஆனால் தேவனுடைய கண்களில் நாம் பார்த்தால் அது சாத்தியமாகவே, நேர்மறையாகவே தெரியும். நம் தேவன் சாத்தியம் இல்லாததை சாத்தியமாக்கும் தேவன்.

### 3. கர்த்தர் மேல் விசுவாசமுள்ள தலைவன் காலேப் :

நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்வோம் (எண்.13:30). காலேபின் விசுவாச அறிக்கை (1 தீமோ.1:7). பயமுள்ள ஆவியை கர்த்தர் கொடாமல் பலமுள்ள, தைரியமுள்ள ஆவியை கர்த்தர் கொடுத்திருக்கிறார். காலேப்பின் விசுவாச வார்த்தை எண்.14:9 அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; அவர்களை காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப்போயிற்று என்று கூறினான். இது தேவன் மேல் அவன் வைத்து இருக்கும் விசுவாசத்தை காட்டுகிறது, தேவனால் எல்லாம் சாத்தியம் என்று அவன் தேவன் மேல் வைத்த நம்பிக்கையை காட்டுகிறது. எண்.13:31-33 காலேப் உடன் சென்றவர்கள் துர்ச்செய்தியை பரப்பினார்கள். அது அவர்களுடைய அவிசுவாசத்தையும், தேவன் கடந்த காலத்தில் வழிநடத்தினதையும் மறந்துபோனதையும் காட்டுகிறது. அதே போல் எந்த பொல்லாத சூழ்நிலையிலும் தேவையின் மத்தியிலும் தேவன் கடந்த நாட்களில் நமக்கு செய்த நன்மையை நினைவுகூறுகிறவராய் இருக்க வேண்டும். அடுத்து, இந்த பிரச்சனையில் சமாதான முயற்சி எடுத்த காலேப்பை கல் எறிய நினைத்தார்கள். ஆனால் காலேப் உத்தமத்தோடு கர்த்தரை சேவித்து, ஆவியின் பெலத்தால், விசுவாசத்துடன் செயல்பட்டதால் அந்த இக்கட்டான நேரத்தில் எண்.14:10 கர்த்தருடைய மகிமை இறங்கி வந்தது.

### 4. குடும்ப பொறுப்புள்ள தலைவனாகிய காலேப் :

முதலாவது தன் பிள்ளையின் எதிர்காலத்தை தீர்மானித்தான். யோசுவா 15:16-19 தன் மகள் அக்சாளை எதிரியை ஜெயிக்கிறவனுக்கு கொடுப்பேன் என்று சொல்லி, ஜெயித்த ஒத்னியேலுக்கு திருமணம் செய்து கொடுத்தான். பிற்காலத்தில் அந்த ஒத்னியேல் நியாயாதிபதியாய் இருந்தான். 2 கொரி.6:14 அந்நிய நுகத்தோடு அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதபடி இருக்க வேண்டும். பிள்ளைகளும் நம்மைப்போல் பாவம், உலகம், பிசாசை ஜெயிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாழ்வை அவர்களுக்கு நாம் ஜெபத்தோடு தெரிந்தெடுப்பது அவசியம். தேவ சித்தத்தை அறிந்து செயல்படுவது அவசியம். இதில் நாம் கவனமாய் இருக்க வேண்டும்.

இரண்டாவது தன் மகளுக்கு ஆஸ்தியுடன் ஆசீர்வாதத்தையும் கொடுத்தான். யோசுவா 15:19-ல் முதலில் தன் மகளுக்கு வறட்சியானதை கொடுத்தான். அவள் கேட்டபின், ஆசீர்வாதமான, நீர்பாய்ச்சலான நிலத்தை, மேற்புறத்திலும், கீழ்புறத்திலும் நீர்பாய்ச்சலான நிலங்களையும் கொடுத்தான். நாம் நம் பிள்ளைகளுக்கு வெறும் ஆஸ்தியை சேர்த்து வைப்பது, கொடுப்பது அது வறட்சியை தரும். தேவ ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுதந்தால் தான் அது அவர்கள் வாழ்வை செழிப்பாய் மாற்றும். தேவ ஆசீர்வாதத்தை அவர்கள் அனுபவிப்பார்கள்.

### 5. பிரச்சனையை எதிர்த்து மேற்கொண்டு ஆசீர்வாதமாய் மாற்றின காலேப் :

யோசுவா 14:12,13 மலைநாட்டில் எதிரிகள் இருந்தாலும் "அதை தாரும் கர்த்தர் என்னோடு இருப்பதால் கர்த்தர் சொன்னபடி அவர்களைத் துரத்திவிடுவேன்" என்றான் (14:12). இதை சொல்லும்போது அவன் எண்பத்தைந்து வயதையுடையவனாய் இருந்தான். நாற்பது வயதில் இருந்த அதே துடிப்பு அவனுக்குள் இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது (14:10). இதற்கு காரணம் சொன்னதை செய்யும் தேவன் என்று தேவன் மேல் அவன் வைத்து இருக்கும் நம்பிக்கை. அவன் வேறே ஆவி உடையவனாய் இருந்தான். பிரச்சனையை பார்த்து சோர்ந்து போகாமல் தேவ பெலத்தால் அதை ஆசீர்வாதமாய் மாற்றுவேன், தேவன் சொன்னதை தருவார் என்று வாக்குத்தத்தத்தை விசுவாசித்து பேசினான். பிரியமான

குடும்ப தலைவர்களே! நம் வாழ்வின் சவால்களை தேவ பெலத்தோடு ஆசீர்வாதமாய் மாற்றுவதை நாம் அனுபவத்தில் கொண்டுவர வேண்டும். தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. நம் குடும்ப வாழ்வில் துரத்த வேண்டியதை துரத்தி, மேற்கொண்டு தேவ ராஜ்யத்தை கட்டும் நபராக இருக்க வேண்டும். (மத்.12:28-ல் இயேசு, 'நான் தேவ ஆவியால் பிசாசுகளை துரத்துகிறபடியால் தேவ ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே என்று சொன்னார். ஆகையால் தேவ பெலத்தால் பிசாசையும் அவன் கிரியைகளையும் நம் குடும்பத்தை விட்டு துரத்தி, தேவ ராஜ்யத்தை இறக்குகிறவர்களாய் இருக்க வேண்டும். தேவ ராஜ்யத்தின் ஆளுகை நம் குடும்பத்தில் இருக்கும்போது பிசாசின் உட்புகுதல் (சண்டை, பெலவீனம், பிரிவினை, அடிமைத்தனம்...) இருக்காது. நாம் குடும்பத்தை நம் எல்லையை உண்டாக்கினவர்க்கே உரிமை பாராட்ட வேண்டும்.

காலேப் கேட்டபடி யோசுவா ஆசீர்வதித்து எபிரோனை சுதந்தரமாக கொடுத்தான் (14:13). எபிரோன் என்றால் ஐக்கியம் என்று அர்த்தம். ஒரு குடும்பத்தலைவனாக நாமும் ஐக்கியத்தை, சமாதானத்தை உண்டுப்பண்ணு கிறவர்களாக இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

பிரியமான அன்பு சகோதரர்களே, இனி காலம் செல்லாது. நாம் காலத்தை வீணாக்காமல் காலேப்பை போல் உத்தமமாய் கர்த்தரை பின்பற்ற அர்ப்பணிப்போம். எதிர்மறையானதை நம் சிந்தையில் குடும்பத்தில் கொண்டுவராமல், நேர்மறையானதை பேசுவோம், சிந்திப்போம், தேவ பெலத்தோடு செயல்படுத்துவோம். தேவன் மேல் உள்ள விசுவாசத்தில் பெருகி கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை விசுவாசிப்போம். அதுவே நம்மை தேவ ஆசீர்வாதத்தை பார்க்க உதவி செய்யும். பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தால், வழிநடத்துதலால், வல்லமையால் நாம் ஜெபத்துடன் ஜெயிக்கவேண்டியவற்றை ஜெயித்து நமக்கென்று தேவன் வைத்து இருப்பதை சுதந்தரிப்போம். குடும்பத்தின் ஆவிக்குரிய ஜீவியத்தில் கவனமாய் இருப்போம், பிள்ளைகளின் எதிர்காலத்தை தேவ சித்தத்தின்படி ஜெபத்தில் தீர்மானிப்போம். குறிப்பாக இந்த இக்கட்டான சூழ்நிலைகளில் மீகா 7:8-படி கர்த்தர் நம்மை விழுந்தாலும் எழுந்திருக்கச் செய்வார், இருளில் உட்கார்ந்தாலும் அவர் வெளிச்சமாய் இருக்கிறார். எதிரியின் (பிசாசின்) பிரச்சனைகளையும், பெலவீனங்களையும், நெருக்கங்களையும் கண்டு சோர்ந்து போகாமல் தேவன் நமக்கு கொடுத்த தைரியத்துடன் எல்லாவற்றையும் மேற்கொண்டு தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம். இக்கட்டில் தேவனே தன் மகிமையை இறக்கி உதவுவார். ஆமென்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# நான் பாரம் நிறைந்தவன்

Rev. E. ஜெகில் எபிதாஸ்
வட சென்னை மண்டல தலைமைப் போதகர்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாம் தேவ அழைப்பைப் பெற்றவர்கள். உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில் ஏசாயாவுக்கு தேவதரிசனம் கிடைத்தது (ஏசா.6:5).

**I. CONVICTION : உணர்த்துதல்** (ஏசா. 6:5).

நாம் தேவ சமுகத்தில் இருக்கும்போது, தேவன் யாரென்று உணரும்போது தேவன் நம்மை உணர்த்துகிறார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நாம் தேவனை உண்மையாய் ஆராதிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பாவங்களை உணர்த்துவார். தேவன் நம்முடைய பாவங்களை மட்டும் உணர்த்துகிறவரல்ல, தேசத்தின் பாரத்தையும் நமக்கு உணர்த்துவார். அழிந்து போகின்ற ஆத்துமாக்கள் தேவனுக்கு முக்கியமானவர்கள். இயேசுவை அறிவிக்க வேண்டும் என்று பாரத்தை உணரவேண்டும் (ஏசா. 64:1-4).

தேவன் வானங்களை கிழித்திறங்கி அவர் கிரியை செய்வார். நாம் ஒரு காரியத்தின் தேவையை உணருவோம் என்றால் உண்மையாய் அதற்கு நம்மை ஈடுபடுத்தி கொள்வோம். ஒரு வாழ்வு அது உமக்காக, உணர்வெல்லாம் உமக்காக, உள்ளமெல்லாம் உமக்காக என்ற பாடலை உணர்ந்து பாடுங்கள். சபை செயல்படுவது சந்திக்கப்படாத மக்களை சந்திப்பதற்காக என்ற ஆழமான உண்மை, நம்முடைய ஊழிய பாரத்தையும், தரிசனத்தையும் விரிவாக்கும்.

**II. CLEANSING : சுத்திகரிக்கப்படுதல்** (ஏசா. 6:5-7).

நாம் சபையின் ஆராதனைகளில் கலந்துகொள்ளும்போது நமக்குள் மாற்றங்கள் ஏற்படவேண்டும். நாம் தேவனை பரிசுத்தராய் பார்க்கும்பொழுது நாம் யார் என்பதை உணரமுடியும். ஐயோ, நான் அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன். அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். நமக்குள் ஒரு சுத்திகரிப்பு அவசியம். நாம் பாவத்தின் கொடிய தன்மையை உணரும்போது அந்த பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்புவோம். நம்முடைய பாவத்தை உணரும்போதுதான் தேசத்தின் பாவத்தை உணருவோம். ஜெபிக்காத குறைகளை அறிக்கையிடுவோம். மிஷனெரி ஊழியங்களுக்காய், கொடுக்காத காரியங்களை தேவ சமுகத்தில் அறிக்கையிடுவோம். மிஷனெரிகளாக வட இந்தியாவில் ஊழியம் செய்கிறவர்களுக்காய் ஜெபிப்போம், கொடுப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**III. CONFESSION : அறிக்கையிடுதல்** (ஏசா. 5:5).

சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றான். நமக்கும் தேவனுக்கும் ஒரு சந்திப்பு அவசியம். அவருடைய தொடுதல் அவசியம். தூதர்கள் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர். பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டு சொன்னதுபோல்,

நாமும் கூப்பிட்டு சொல்லுவோம், தேவன் பரிசுத்தர் என்பதை அறிக்கையிடுவது மட்டுமல்ல, அவர் அன்பாகவே இருக்கிறார் என்று அறிக்கையிடுவோம். நம்முடைய இருதயம் எதினால் நிறைந்து இருக்கிறதோ அதுவே வாயின் அறிக்கையாக மாறுகிறது. பீகாரில் சில மாவட்டங்களில் ஒரு சபைதான் இருக்கின்றது. ஒரு மாவட்டத்திற்கு தமிழ்நாட்டைபோல இருபது சபைகள் உருவாக்கபட வேண்டும் என்று அறிக்கையிடுவோம். பீகாரில் பன்னிரண்டு கோடி மக்கள் இயேசுவை அறிய வேண்டும். முப்பத்தெட்டு மாவட்டத்திற்கும் இருபது சபைகள் ஆரம்பிக்கப்பட்டால் நம்முடைய மாநிலத்தை போல் ஆசீர்வதிக்கப்பட்ட மாநிலமாய் மாறிவிடும். தினமும் ஜெபத்தில் அறிக்கையிடுங்கள்.

**IV. COMMISION : கட்டளைபெறுதல்** (ஏசா. 6:8-10).

நாம் புறப்பட்டுபோய் சிதறுண்ட ஆடுகளை சேர்க்கவேண்டும். காயப்பட்ட ஆடுகளின் காயங்களைக் கட்டவேண்டும். சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க புறப்படவேண்டும். முதலாவது ஒரு மாநிலத்தின் ஒரு மாவட்டத்திற்காய் ஜெபியுங்கள். நம்முடைய மிஷன் தலைவர்களோடு வருடத்தில் ஒருமுறை மூன்று நாள் மிஷனெரி பயணத்தில் செல்ல புறப்படுங்கள். நாம் போகும்போது தேவன் ஆத்துமாக்களை தருவார். ஏசாயா 61:1-3 கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்... 1 சாமு. 16:13 அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்.

இன்றைக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதுக்கள் வேண்டும். மாமிசத்தின்படி செயல்படும் சவுல்களின் ஆவிகளை விரட்ட தாவீதுக்கள் வேண்டும். நமக்கு விரோதமாய் எழும்பியிருக்கும், சத்துருக்களின் கிரியைகளை அழிக்க தேவன் உங்களை அபிஷேகித்து பயன்படுத்துவார். நாம் பெற்றிருக்கும் அபிஷேகம் நமக்கு வல்லமையும் அதிகாரத்தையும் தருகிறது. மத். 28:18-20.புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்குவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!! ஜெபியுங்கள்!!!

1. நாம் தாங்கும் மிஷனரிகள், அவர்களின் குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
2. கொள்ளை நோய் தேசத்தை தாக்கியிருக்கும் இந்த சூழ்நிலைமையில் மிஷனரிகள், அவர்கள் குடும்பங்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.
3. கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற மிஷனரிகளின் குடும்பங்கள் குணமாக்கப்பட ஜெபியுங்கள்.
4. மிஷனரிகளை ஜெபத்தினாலும், பணத்தினாலும் தாங்கும் நமது சபை விசுவாச குடும்பங்களின் நலனுக்காக, இன்னும் அநேகரை தேவன் எழுப்பித்தரவும் ஜெபியுங்கள்.
5. நமது வடகிழக்கு பிராந்தியத்திற்குட்பட்ட 15 மாநிலங்களுக்காக ஜெபியுங்கள்.
6. நமது சபைகளிலிருந்து அழைப்பு பெற்ற அநேகர் மிஷனரிகளாய்ப் புறப்பட்டுச் சென்று தேவராஜ்யம் கட்ட ஜெபியுங்கள்.

7. இந்தியா முழுவதும் சுவிசேஷம் செல்லும்படியான வாசல் அடைபடாதபடி கர்த்தர் பாதுகாக்க, கிறிஸ்தவ எதிர்ப்பு மறைந்து தேசம் முழுவதும் மாபெரும் எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள்.

8. மிஷன் பணித்தளங்களில் சபைக்கென்று இடங்கள் வாங்க, சபைகள் கட்ட, பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

9. மிஷன் இயக்கத் தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.

---

# நரகத்திலிருந்தும் சொர்க்கத்திலிருந்தும் குரல்கள்!

நீங்கள் என் அண்டை வீட்டிலிருந்தீர்கள்; நீங்கள் கோவிலுக்குப் போவதைப் பார்ப்பேன். நான் குழந்தையாயிருந்தேன்; என் பெற்றோர் கடவுள்களை வழிபட பல இடங்களுக்கு அழைத்துச் செல்வர். ஒரு கருப்பு புத்தகத்தை எடுத்துச் செல்வீர்கள்; அது பைபிள் என்று பின்பு அறிந்தேன். இப்போது நான் நரகத்தில் அலறிக்கொண்டிருக்கிறேன். நீங்களோ பரலோகத்தில் மகிழ்ந்திருக்கிறீர்கள். ஏன் எனக்கு நீங்கள் மோட்சம், நரகம் குறித்து அறிவிக்கவில்லை? பல்லாண்டுகள் அயலாராக வாழ்ந்தோமே. நேரம் கிடைக்கவில்லையா? நான் எங்கு போனால் என்ன என்று நினைத்து விட்டீர்களா? எனக்கு நீங்கள் அக்கறை காட்டாமல் போனது ஏனோ, ஐயோ ஏனோ?



என் மளிகைக் கடைக்கு நீங்கள் எப்போதும் வருவீர்கள். நான் கனிவோடும் புன்முறுவலோடும் உங்களுக்கு உதவினேன். உங்கள் கடவுளைப் பற்றிச் சொன்னால் நான் எதிர்த்து விடுவேன் என்று என் முகம் காட்டியதோ?இல்லை மேடம், கடவுளைத் தேடி ஊர் ஊராகத் திரிந்தேன். ஒரு விபத்தில் உயிரிழந்து இந்தக் கொடூரமான இடத்திற்கு வந்து சேர்ந்தேன். பிசாசுகள் என்னைச் சித்ரவதைச் செய்கின்றன. உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் கடவுளைக் குறித்த துண்டுப்பிரதியையோ ஒரு புத்தகத்தையோ எனக்குக் கொடுத்திருப்பீர்களானால் நரகத்திற்குத் தப்பித்திருப்பேன். ஏன் மேடம் என்னிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டீர்கள்?

உங்களோடு கூட மூன்று மணி நேரம் ரயிலில் பயணித்தேன். நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். உங்கள் வேதத்தை வாசித்தீர்கள். உங்கள் கடவுளைக் குறித்தும் பைபிளைக் குறித்தும் அறிய குறுகுறுப்பாயிருந்தது. என்னிடம் நன்றாகப் பேசினீர்கள். உங்கள் தின்பண்டங்களைக் கூடப் பகிர்ந்து கொண்டீர்கள். ஆனால் உங்கள் கடவுளைக் குறித்துப் பேசவேயில்லை. இப்போது உங்கள் கடவுள்தான் மெய்யான கடவுள் என்று அறிந்து கொண்டேன். ஏன் நீங்கள் மதத்தைக் குறித்துப் பேசவில்லை? இப்போது நரகத்தில் எரிந்து கொண்டிருக்கிறேன். ஏன், ஐயோ, ஏன்?

டீச்சர், இரண்டு ஆண்டுகள் உங்களிடம் படித்தேன். பின்பு வேறு வகுப்பிற்குச் சென்றாலும் அவ்வப்போது உங்களைச் சந்தித்தேன். நான் பதினோராம் வகுப்பு படிக்கும்போது புற்றுநோய்க்குப் பலியானேன். ஏன் மேடம் என்னிடம் இத்தனை இரக்கமற்றவராய் நடந்து கொண்டீர்கள்? பாசமாய் எனக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தீர்களே. ஆனால் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான சத்தியத்தைக் கண்டுபிடிக்க அது எனக்கு உதவவில்லையே. இப்போது புழுக்களுடன் புரளுகிறேன். நீங்கள் போகும் அழகிய இடத்தைக் கனாக் காண்கிறேன். உலகத்திலேயே மிகப்பெரிய உண்மையை மறைத்து ஏன் என்னை ஏமாற்றிவிட்டீர்கள் மேடம்? ஐயகோ, என்ன செய்வேன்?

அருமை டாக்டரே, இருதய அறுவை சிகிச்சைக்காக உங்கள் பராமரிப்பிலிருந்தேன் ஆபத்துகளை விளக்கி சில தாள்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டீர்கள்."மரணத்திற்குப் பிறகு எங்கு செல்வேன்? நரகம் உண்டா? மோட்சம் உண்டா" என்று எண்ணி என் இருதயம் நடுங்கிக் கொண்டிருந்தது. விடை உங்களிடம் இருந்தது டாக்டர். ஆனால் எனக்குச் சொல்லாமல் விட்டீர்களே. அறுவை சிகிச்சைக்கு முன்பாக இயேசுவின் பெயரில் ஒரு பெரிய இறைவனிடம் எனக்காக வேண்டுதல் கூட செய்தீர்கள். ஆனால் இந்த மாபெரும் இறைவனைக் குறித்தும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் எனக்கு நீங்கள் சொல்லவில்லையே, அவரை நம்பியிருந்தேனானால் அவர் என்னை சொர்க்கத்திற்குக் கொண்டுச் சென்றிருக்கலாமே. உங்கள் கடவுளை ஏற்றுக்கொள்ளும்படியாக ஏன் நீங்கள் என்னை நயங்காட்டவில்லை? நீங்கள் அவசரமாகச் சென்றதால் உங்களிடம் பேச பயப்பட்டேன். அறுவை சிகிச்சையின் போது மரணமடைந்தேன். ஐயோ, டாக்டர், என்னை நரகத்திற்கு அனுப்பி விட்டீர்களே!

டாக்டரைப் பார்க்கக் காத்திருந்தபோது நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். வாழ்க்கையில் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த என்னை, தற்கொலை எண்ணம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. இயேசுவைத் தெரியுமா என்று திடீரென்று கேட்டீர்கள். பிறகு இயேசுவை நம்பினால் சமாதானம் பெறலாம் என்றீர்கள். உங்கள் வீட்டிற்கு வந்த உங்களுடன் பேசலாமா என வினவினேன். மருத்துவரைப் பார்த்துவிட்டு வீடு திரும்ப நேரமாகும் என்றீர்கள். காத்திருக்கிறேன் என்றேன். என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றீர்கள். அங்கே முழங்காலிட்டு இயேசுவை என் இரட்சராக ஏற்றுக் கொண்டேன். வேதம் ஒன்றைக் கொடுத்தீர்கள். இப்போது தகப்பனாகிய கடவுளோடும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவோடும் மற்ற எல்லாத் தேவ பிள்ளைகளோடும் பரலோகத்தில் இருக்கிறேன். உங்களைக் கட்டி அணைத்து நன்றி சொல்லக் காத்திருக்கிறேன். என்னிடம் பேச தைரியமாக உங்கள் வாயைத் திறவாதிருந்திருப்பீர்களானால்! இலவசமாய்க் கொடுப்பதற்கு பைபிளின் விலை அதிகமே எனக் கணக்குப் போட்டிருப்பீர்களானால்! இன்று நரகத்தில் துடித்துக் கொண்டிருப்பேன். நன்றி ஐயா, ஒரு கோடி நன்றி!

நன்றி : ஆசீர்வாதம்



# தலைப்பு வேத பாடம்

*(Topical Bible Study)*


**Rev. R. நெல்சன் ஞானகுமார்**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.

மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


வேதத்திலுள்ள ஏதேனும் ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு அதைக் குறித்த அனைத்து விவரங்களையும் ஆராய்வதே தலைப்பு வேதபாடமாகும்.

**தலைப்பு வேத பாடத்தின் நன்மைகள்:**

- ஒரு குறிப்பிட்ட காரியத்தை அல்லது தலைப்பைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்ற முழு விளக்கம் (Total picture) கிடைக்கும்.
- ஒரு குறிப்பிட்ட தலைப்பைக் குறித்த அனைத்து கேள்விகளுக்கும் விடை கிடைக்கும்.

## தலைப்பு வேதபாட முறையின் படிகள்

1. தலைப்பை தெரிந்தெடுங்கள் (Choose the topic).
2. தலைப்பு சம்பந்தப்பட்ட வேறு வார்த்தைகளை எழுதுங்கள் (Compile list of words).
3. வேத வசனத்தை சேகரியுங்கள் (Collect Bible references).
4. தலைப்பு சம்பந்தப்பட்ட கேள்விகளை கேளுங்கள் (Compose Questions).
5. வசனங்களை குழுக்களாக பிரியுங்கள் (Categorize the references).
6. கற்றுக்கொண்டதை வாழ்க்கையில் இணைத்து விடுங்கள் (Connect the learning to life).

## தலைப்பு வேதபாடத்திற்கான வழிகாட்டுதல்

**1.தலைப்பைத் தெரிந்தெடுங்கள்:** (உங்களுக்குத் தேவையான, விருப்பமான தலைப்பை தெரிந்தெடுங்கள்) நீங்கள் வேதம் வாசிக்கும்போது, பிரசங்கம் கேட்கும்போது உங்களுக்கு மனதில் பட்ட ஒரு வார்த்தையாயிருக்கலாம். உதாரணம்: 1. ஜெபம், 2. தாழ்மை, 3. பெருமை, 4. பொறுமை, 5. கோபம், 6. புறங்கூறுதல்.....

**2.தலைப்பு சம்பந்தப்பட்ட வார்த்தைகளை எழுதுங்கள்:** தலைப்பு சம்பந்தப்பட்ட வேறு வார்த்தைகள் என்னவெல்லாம் இருக்கிறது என யோசித்து எழுதுங்கள். எதிர்பொருள் உள்ள வார்த்தையாக கூட இருக்கலாம்.

உதாரணமாக, பாவம் என்ற தலைப்பில் நீங்கள் படிக்க விரும்புகிறீர்கள் என வைத்துக்கொள்ளுங்கள். பாவம் என்ற வார்த்தைக்கு சம்பந்தப்பட்ட அக்கிரமம், அநீதி, அநியாயம், மீறுதல், பொல்லாங்கு, பரிசுத்தம், சுத்தம், அசுத்தம் என்பன போன்ற வேறு வார்த்தைகளை யோசித்து எழுதுங்கள்.

**3.வேதவசனங்களை சேகரியுங்கள்:** தலைப்பு சம்பந்தமான முக்கிய வசனங்களை எல்லாம் ஒத்த வாக்கிய அகராதி (Concordance) மூலம் குறித்துக்

கொள்ள வேண்டும். அதோடு அந்த வசனங்களின் சுருக்கத்தை அல்லது வசனத்திலுள்ள முக்கிய வார்த்தைகளை அந்தந்த வசனங்களின் அருகே எழுதிக்கொள்ள வேண்டும். இப்போது பாவம் என்ற தலைப்பு சம்பந்தப்பட்ட சில வசனங்களை பார்க்கலாம்.

1) 1 சாமுவேல் 12:23 - விண்ணப்பம் பண்ணாமலிருப்பது.
2) 1 யோவான் 3:4 - நியாயப்பிரமாணத்தை மீறுவது.
3) நீதிமொழிகள் 14:21 - அவமதிப்பது.
4) நீதிமொழிகள் 24:9 - தீய நோக்கம்.
5) யாக்கோபு 2:9 - பட்சபாதம் காட்டுதல்.
6) யோவான் 8:34 - அடிமைத்தனம்.
7) ஏசாயா 59:2 - ஜெபம் கேட்கப்படாது.
8) எரேமியா 5:25 - நன்மையை தடுக்கிறது.
9) மீகா 7:9 - தேவ கோபம்.
10) ரோமர் 6:23 - மரணம்.
11) நீதிமொழிகள் 28:13 - அறிக்கையிட வேண்டும்.
12) ரோமர் 6:13 - ஒப்புக்கொடுக்காதே.
13) யோவான் 5:14 - இனி பாவஞ்செய்யாதே.
14) எபிரெயர் 12:4 - போராடு.
15) 1 தீமோத்தேயு 5:22 - உடன்படாதே.
16) 2 கொரிந்தியர் 5:21 - பாவமானார்.
17) யோவான் 16:8,9 - உணர்த்துவார்.
18) 1 யோவான் 1:7,8 - கழுவுவார்.
19) சங்கீதம் 103:12 - தூரமாய் விலக்குவார்.
20) எரேமியா 31:34 - பாவங்களை நினையார்.

**4.தலைப்பு சம்பந்தப்பட்ட கேள்விகளை கேளுங்கள்:** தலைப்பை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கேதுவாக, தலைப்பை மையமாகக் கொண்டு பல்வேறு கேள்விகளை எழுதுங்கள். ஒவ்வொரு வசனமுமே ஏதோ ஒரு கேள்விக்கு பதிலாக இருக்கும். அப்படி யோசித்து நீங்களே கேள்விகளை எழுதுங்கள்.

**உதாரணமாக:** "...பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக் கிறான்..." (யோவான் 8:34) இந்த வசனத்தை வைத்து பாவத்தின் விளைவு என்ன? என்ற ஒரு கேள்வியை எழுப்பலாம்.

இந்த விதமாக பாவம் என்ற தலைப்பு சம்பந்தமாக கீழ்க்கண்ட நான்கு கேள்விகளை எழுப்பலாம்.

1.பாவம் என்றால் என்ன?

2.பாவத்தின் விளைவு என்ன?

3.பாவத்தை மேற்கொள்ள வழி என்ன?

4.பாவத்தை அறிக்கையிட்டால் ஆண்டவர் என்ன செய்வார்?

**5. வசனங்களை குழுக்களாக பிரியுங்கள்:** குறித்து வைத்திருக்கிற பல்வேறு வசனங்கள் நீங்கள் கேட்டிருக்கிற எந்த கேள்விக்கு பதிலாக வரும் என்பதை பார்த்து அதற்கு கீழே எழுதுங்கள்.

மேற்கண்ட நான்கு கேள்விகளுக்கு பதிலாக அமையும் வசனங்களை, அந்தந்த கேள்விகளுக்கு அடியில் எழுதலாம்.

i). **பாவம் என்றால் என்ன?**

1) 1சாமுவேல் 12:23 - விண்ணப்பம் பண்ணாமலிருப்பது.
2) 1யோவான் 3:4 - நியாயப்பிரமாணத்தை மீறுவது.
3) நீதிமொழிகள் 14:21 - அவமதிப்பது.
4) நீதிமொழிகள் 24:9 - தீய நோக்கம்.
5) யாக்கோபு 2:9 - பட்சபாதம் காட்டுதல்.

ii). **பாவத்தின் விளைவுகள் எவைகள்?**

1) யோவான் 8:34 - அடிமைத்தனம்.
2) ஏசாயா 59:2 - ஜெபம் கேட்கப்படாது.
3) எரேமியா 5:25 - நன்மையை தடுக்கிறது.
4) மீகா 7:9 - தேவ கோபம்.
5) ரோமர் 6:23 - மரணம்.

iii). **பாவத்தை மேற்கொள்ள வழி என்ன?**

1) நீதிமொழிகள் 28:13 - அறிக்கையிட வேண்டும்.
2) ரோமர் 6:13 - ஒப்புக்கொடுக்காதே.
3) யோவான் 5:14 - இனி பாவஞ்செய்யாதே.
4) எபிரெயர் 12:4 - போராடு.
5) 1தீமோத்தேயு 5:22 - உடன்படாதே.

iv). **பாவத்தை அறிக்கையிட்டால் ஆண்டவர் என்ன செய்வார்?**

1) 2 கொரிந்தியர் 5:21 - பாவமானார்.
2) யோவான் 16:8,9 - உணர்த்துவார்.
3) 1யோவான் 1:7,8 - கழுவுவார்.
4) சங்கீதம் 103:12 - தூரமாய் விலக்குவார்.
5) எரேமியா 31:34 - பாவங்களை நினையார்.

**6. கற்றுக்கொண்டதை வாழ்க்கையில் இணைத்துவிடுங்கள்**

- ஆண்டவருடைய வசனத்தை மீறி எதை செய்தாலும் அது பாவமாகும்.
- ஆண்டவருடைய வசனத்தின்படி செய்தாலும் தவறான நோக்கத்தோடு செய்தால் அது ஆண்டவருக்கு முன்பாக பாவமாகும்.
- பாவம் ஆண்டவரோடுள்ள உறவை பாதிக்கும்.
- பாவத்தைக்குறித்து உண்மையில் மனஸ்தாபப்பட்டு அறிக்கை செய்தால் மன்னிப்பு உண்டு.



# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

## Fifth Commandment- ஐந்தாம் கற்பனைகள்

**Rev. D. சாலமோன்**

President, Christ Ambassadors

Honour your parents தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக!

### 1.கிறிஸ்தவ குடும்பம்:

தேவனுடைய மீட்பின் திட்டத்தில் குடும்பம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. 'குடும்பம்' என்பது 'ஒருவரோடு ஒருவர் உறவுடைய ஒரு குழு ஆகும்' Family is a group of people who are related to each other. தேவனே இக்குடும்பத்தின் தலைவர். நம் நடுவில் நம்மோடு வாசம் செய்கிறார்.

மல்கியா 2:15 வசனத்தின்படி வேதாகமத்தில் குடும்பத்தை குறித்த தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் நிறைந்துள்ளது. ஒரு ஆணும் பெண்ணும் வேத ஒழுங்கின் படி கணவன்-மனைவியாக இணைக்கப்பட்டு, தகப்பன்-தாய் என்ற அந்தஸ்து அடைந்து அப்பா-அம்மா என்று பிள்ளைகளால் அழைக்கப்படுகிறார்கள்.

### தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக!

பரிசுத்த வேதாகமத்தில் தேவனாகிய கர்த்தர் மனிதனுக்கு உரிய வாழ்வியல் சட்டமாக கொடுத்த பத்து கற்பனைகளில் ஐந்தாவது கற்பனையானது (யாத்.20:12) உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதாகும். "கனம் honour" என்ற வார்த்தையானது எபிரெய மொழியில் (kabed) இருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மகிமை, செல்வாக்கு, மரியாதை, போன்ற அர்த்தங்கள் பொருந்தும். உன்னை பெற்ற தகப்பனுக்கும் தாய்க்கும் உங்கள் வாழ்க்கையில் தகுந்த மரியாதை கொடு என்பதாகும். நம் பெற்றோரை மதிப்பது என்பது அவர்கள் சொல்வதைக் கேட்பது, அவர்களை மதிப்பது, அவர்களை நேசிப்பதே. அவர்கள் மனம் கோணாமல் கர்த்தருக்குள் கீழ்ப்படிவதாகும். இதற்கு எதிர்மாறாக உங்கள் பெற்றோரை அலட்சியமாய் நடத்துவது, அவர்களை புறக்கணிப்பது, குறைப்பது அல்லது தவறாக நடத்துவது அவர்கள் சொல்கேளாமல் நடப்பது.

### II. பின்நவீனத்துவத்தின் தாக்கம் (Post Modernism Effects)

இளம் வயதில் பெற்றோர் பிள்ளை உறவு இனிய நினைவுகள் நிறைந்தது. சிறுவயதில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரை ஹீரோவாக பார்க்கிறார்கள். ஒருகுறிப்பிட்ட காலக்கட்டதில் பெற்றோர் பிள்ளை உறவில் விரிசல் ஏற்படுகிறது. தங்கள் சொந்த பெற்றோரை அப்பா அம்மா என்று அழைக்கவும், அறிமுகப்படுத்த வெட்கப்படும் அளவிற்கு எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகிறது. இதற்கான காரணங்களில் மிக முக்கியமாக பின்நவீனத்துவமானது பெரும் தாக்கத்தை வாலிபர்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது.

தற்போதைய பின்நவீனத்துவ காலத்தின் இளைஞர்கள், வாலிபர்களின் பங்களிப்பு எல்லா துறைகளிலும் அதிக திறன் வாய்ந்ததாக இருந்து வருகிறது. அதே சமயம் வாலிபர்களின் செயல் திறன், வெளி உலக அறிமுகங்களின் தாக்கம், குடும்பத்தில் சமூகத்தில் பெற்றோர்கள் (மூத்தவர்கள்) அலட்சியம் பண்ணப்படு கிறார்கள்.

## III. பெற்றோர் பிள்ளை உறவில் இடைவெளிக்கான காரணங்கள்

1. ஒழுக்கத்தை கற்று கொடுப்பதில் கையாளும் தவறான வழிமுறைகள்,
2. காலத்தின் மாற்றத்தையும், காலத்தின் அவசியத்தையும் புரிந்துகொள்ளாமை,
3. பெற்றோர்கள் தங்கள் அனுபவத்தை இக்காலத்திற்கு தகுந்தது போல சொல்லாதிருப்பது,
4. அன்பை வெளிப்படுத்தாமல் கட்டுப்பாடு விதிப்பது, அறிவுரை மட்டுமே கூறுவது.
5. பிள்ளைகளை பாராட்டாமல் குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு நடந்து கொள்ளுதல்,
6. வாலிப வயதின் சவால்களை சந்திக்கும் போது, அப்பிரச்சனைகளை கையாளும் விதம்,
7. பிள்ளைகள் மீது குறைந்த நம்பகத்தன்மை,
8. சந்ததி இடைவெளி (Generational Gap) மற்றும் பல.

## IV. பெற்றோரை கனம் பண்ண சில ஆலோசனைகள்

கலாச்சார மாற்றத்தின் நடுவில் வேத வசனத்தின் படி வாழ கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். சபைக்குள் இருக்கும் நமது வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்து வளர வேண்டும். உலகத்தின் மாதிரிகளை பின்பற்ற நமக்கு அனுமதி இல்லை. Dear youth do not follow world's examples.

வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய ஐந்தாம் பிரமாணத்தை தங்கள் வாழ்க்கையாக்கிட சில ஆலோசனைகள்:

**1.உங்கள் பெற்றோருக்கு மரியாதை செய்ய வேண்டும் (Respect them)** நீதி.15:20.

உங்கள் பெற்றோர் படிப்பில், தோற்றத்தில். பழக்கவழக்கத்தில் வேறுபட்டிருந்தாலும் அவர்களுக்கு உங்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு அக்கறை எதற்கும் யாருடனும் ஒப்பிட முடியாது.

**2.உங்கள் பெற்றோருக்கு செவிகொடுங்கள் (Listen to them)** நீதி. 23:22.

பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படியுங்கள் இது கர்த்தருக்கு பிரியமானது என்று வேதம் கூறுகிறது. கொலோ 3:20. கீழ்ப்படிதலே உத்தமம் 1 சாமு 15:22.

**3.உங்கள் பெற்றோரைப் பாராட்டுங்கள் (Appreciate them)** நீதி. 12:15.

ஒரு உயிராய் இந்த உலகத்தில் நீங்கள் உயிருடன் வாழ கர்த்தர் உங்கள் பெற்றோரை பயன்படுத்தி இருக்கிறார். அவர்களின் தியாகம், நேரம், பணம், சரீர ஆரோக்கியம் ஆகியவற்றிக்காக அவர்களுக்கு நன்றியாய் இருங்கள். உங்கள் பெற்றோரின் பிறந்த நாள் திருமண நாள் ஆகிய விசேஷ நாட்களில் உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.

**4.உங்கள் பெற்றோரிடம் நேரம் செலவிடுங்கள் (Spend time with them)** நீதி. 10:1, 15:20 .

Spend time with your parents. Make them feel happy by providing them, emotional care, உங்கள் குடும்பத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் நீங்கள் உங்கள் பெற்றோருடன் நிற்பதை அவர்கள் உணர செய்யுங்கள். உதவி செய்யுங்கள், பலவீனபடும் போது பெலனாய் இருங்கள். வீட்டின் வேலைகளை பகிர்ந்து கொள்ளுங்கள். தன்னார்வமாய் செயல்படுங்கள்.

### 5.உங்கள் பெற்றோரை நேசியுங்கள் (Love them).

உங்கள் பெற்றோரை யாரிடமும் எதற்காகவும் விட்டுக் கொடுக்காதீர்கள். அவர்கள் குறைகளை பேசாமல் இருப்பதே அவர்களை நேசிப்பதின் அடையாளம். **உலகில் இருக்கும் நாம் அனைவரும் பூரணத்தை நோக்கி பயணிப்பவர்களே!** உங்களை பெற்றோர் இருக்கிற வண்ணமாகவே அவர்களை ஏற்றுகொள்ளுங்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை தேர்ந்தெடுப்பதில்லை. அது தேவனின் செயல், தங்கள் பெற்றோரை நேசிக்கிறவர்கள் தன்னை உண்டாக்கிய ஆண்டவரை நேசிக்கிறான், பெற்றோரை அலட்சியம் செய்கிறவர்கள் தன்னை உண்டாக்கிய தேவனை அவமதிக்கிறார்கள்.

### நீ ஆசீர்வாதமாய் இருக்க!

தேவன் கொடுத்த பிரமாணங்களில் ஐந்தாவது பிரமாணமே ஆசீர்வாதத்தையும் சேர்த்து விளக்குகிறது. உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வாய்ப்பை சர்வவல்ல தேவன் வாலிபர்களே உங்கள் கையில் கொடுத்துள்ளார். வேதத்தில் சிறு வயதில் இருந்தே ஐந்தாம் பிரமாணத்தை தவறாமல் கடைபிடித்த யோசேப்பு, சாமுவேல், எசேக்கியா, யோவாஸ், மோசே, ரூத், எஸ்தர், தீமோத்தேயு, ஆகியோர் நமக்கு சாட்சிகளாக இருக்கிறார்கள். உங்கள் பெற்றோருடனான உறவில் முன்னேற்றத்தில் வேத வசனங்கள் பின்பற்றப்படட்டும். தேவன் தம்முடைய வாக்குத்தங்களை உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவார்.





உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
✆ 94862 86002

>>உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவிசெய்யும் தின தியான புத்தகங்கள்...
>>உங்கள் குடும்ப ஜெபத்தில் வாசிக்க வேண்டிய ஒரு புத்தகம்...
>>வாலிபர்களும் விரும்பி வாசிக்கும் ஒரு தின தியான நூல்...
>>ஊழியம் செய்பவர்களுக்கும், பராமரிப்புக் குழுக்கள் நடத்துகிறவர்களும் மிகவும் பிரயோஜனமான பிரசங்க உதாரணங்கள் அடங்கிய அருமையான ஆவிக்குரிய புத்தகம்...



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை - 20


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் ஒரு வித்தியாசமான நபருடைய உண்மை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.. வாங்க கதைக்குள்ள போகலாம்.

ஆஸ்திரேலியாவில் வசித்துவந்த ஒரு தம்பதியினருக்கு 1982-ம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இரண்டு கைகளும் இல்லாமல், இரண்டு கால்களும் இல்லாமல் பிறந்த குழந்தையைப் பார்த்துக் கண்ணீர்விட்டு கதறி அழுத பெற்றோர், விரைவில் தங்கள் மனதை கர்த்தருக்குள் தேற்றிக்கொண்டனர். பின் அவனுக்கு நிக் உஜிசிக் என்று பெயர் வைத்தனர்.

அந்தக் குழந்தைக்கு கைகளும் இல்லை, கால்களும் இல்லை, அவனுடைய இடுப்போடு ஒட்டியிருந்த இடது பாதத்தில் இரண்டு விரல்கள் ஒட்டியபடி இருந்தன. அந்த இரண்டு விரல்களையும் ஆபரேஷன் செய்து பிரித்தனர். பிஞ்சு குழந்தை என்ன பாவம் செய்தது? ஓடியாடி விளையாட வேண்டிய வயதில் வீட்டின் மூலையில் பொம்மையை போல கிடத்தப்பட்டிருப்பான். வளர வளர மனகாயங்களும், நான் மட்டும் ஏன் இப்படி பிறந்திருக்கிறேன் என்ற கேள்வியும் மனக்கதவை தட்டிக்கொண்டே இருந்தது.

பள்ளியில் சேர்க்க நிக் உஜிசிக்கை அழைத்துச் சென்ற அவனது பெற்றோருக்கு அடுத்த அதிர்ச்சிக் காத்திருந்தது. எந்தப் பள்ளியும் அவனைச் சேர்த்துக்கொள்ளத் தயாராக இல்லை. கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை, சாதாரணப் பள்ளிகளில் படிப்பதை ஆஸ்திரேலிய சட்டம் அனுமதிக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து சட்டத்தையே மாற்றவைத்து நிக் உஜிசிக்கை பள்ளியில் சேர்த்தனர். பள்ளியில் பல அவமானங்களைச் சந்தித்தார். அவரோடு பழகுவதற்கு நண்பர்கள் முன்வரவில்லை. சில முரட்டு மாணவர்கள் அவரது தோற்றத்தைக் கேலி செய்தனர். கிண்டலும் கேலியும் உச்சத்தைத் தொட்டபோது, குளிக்கும் தண்ணீர் தொட்டியில் தற்கொலைக்கு முயன்ற நிக் உஜிசிக்கை அவரது பெற்றோர் காப்பாற்றி சிகிச்சை அளித்தனர்.

'மகனே, நீ பிறந்ததற்கு ஒரு நோக்கம் உண்டு. அந்த நோக்கம் நிறைவேற ஒவ்வொருநாளும் ஜெபம்பண்ணு' என அவனது பெற்றோர் அறிவுரையும், ஆறுதலையும் வழங்கினர்.

கிறிஸ்துவின் மேல் நிக் உஜிசிக் வைத்த ஆழமான விசுவாசம், அவனது எதிர்மறையான சூழ்நிலையில் பெரும் பெலமாக காணப்பட்டது. விளைவு என்ன? நடை, உடை, பாவனைகளில் கம்பீரம் வந்தது. அவரது குரல் உயர்ந்தது. பின்னர் அவமானப்பட்ட அதே பள்ளியில் மாணவர் தலைவரானார். கல்லூரியில்

சேர்ந்தபோது அங்கும் கதாநாயகனாகக் கலக்கினார். கணக்கியல் துறையில் பட்டம் பெற்றார். ஏழை மாணவர்களுக்கு உதவுவதற்காக நிதிதிரட்டும் நிகழ்ச்சிகள் நடத்தினார்.

இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாத நிக் உஜிசிக் இன்று ஸ்கேட்டிங் செய்கிறார், நீச்சல் போட்டிகளில் பங்கேற்கிறார், செயற்கை கை பொருத்தி கார் ஓட்டுகிறார், தனது பாதத்தில் ஒட்டியிருக்கும் 2 சிறு விரல்களுக்கிடையே பேனாவை சொருகி ஓவியம் வரைகிறார், விரைவாக எழுதுகிறார், நிமிடத்துக்கு 45 வார்த்தைகளை கணினியில் டைப் செய்கிறார், எலெக்ட்ரானிக் ட்ரம்ஸ் இசைக்கிறார், உலகங்கும் பயணித்து சொற்பொழிவாற்றுகிறார். இந்த பட்டியலில் இடம்பெறாத இன்னும் பல சாதனைகளை அவர் புரிந்து வருகிறார்.

இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த அவரது விசுவாசமும், விடாமுயற்ச்சியும் தான் அவரது கைகளாகவும், கால்களாகவும் செயல்படுகிறது. திருமணம் செய்ய தகுதியே இல்லை என பலரால் அவமதிக்கப்பட்ட இவர், கானே மியாகரா என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார். தேவ கிருபையினால் அவர்களுக்கு இப்போது இரண்டு செல்லக் குழந்தைகள் உள்ளனர்.

விரக்தியின் எல்லைவரை சென்று, பின் நம்பிக்கையை வளர்த்துக் கொண்ட நிக் உஜிசிக், இப்போது மற்றவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கற்றுத் தருகிறார். இதுவரை 58 நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறார். 60 லட்சம் பேருக்குத் தன்னம்பிக்கைப் பயிற்சி அளித்திருக்கிறார்.

இயற்கை தந்த சவால்களை எதிர்கொண்டு, சாதனையாளராக உயர்ந்து நிற்கும் நிக் உஜிசிக், காலையில் கண் விழித்தது முதல், கட்டிலில் இருந்து குதித்து இறங்குவது, சோபாவில் குதித்து ஏறி அமர்வது, புத்தகத்தை எடுத்துப் படிப்பது, குறிப்பு எழுதுவது, போனை எடுத்துப் பேசுவது என எத்தனையோ வேலைகளை தானே செய்கிறார்.

**“தனது முயற்சிகளில் 100 முறை தோல்விகள் வந்தாலும், 1,000 முறை முயற்சிப்பதாகவும், அகால பிறவியாக பார்க்கப்பட்ட என்னாலேயே இவ்வளவு சாதிக்க முடிகிறது என்றால், உங்களால் எவ்வளவு முடியும்”** என மேடைகள் தோறும் சவால் விடுகிறார்.

அன்பு தம்பி தங்காய், உங்க தோற்றத்தையோ, உங்க இயலாமையையோ, உங்க குடும்ப சூழ்நிலையையோ குறித்து யாரேனும் அவமானப்படுத்துகிறீர்களோ? கவலைப்படாதிருங்கள். உங்கள் மனக்குமுறலை தேவன் நன்றாகவே அறிந்திருக்கிறார். உங்களை உருவாக்கியதற்கு மிக உயர்ந்த ஒரு நோக்கம் உண்டு. ஆகவே தேவன் மேல் நம்பிக்கையை வையுங்கள். சோர்ந்திடாமல் விடாமுயற்ச்சியுடன் செயல்படுங்கள். நீங்கள் சாதிப்பது உறுதி.

“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி” (யோவான் 1:9).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

# தேவ ஜனங்களும், நற்கிரியைகளும்

1. நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (எபே. 2:10).
2. நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (தீத்து 3:8).
3. நற்கிரியைகளாகிய கனிகளை கொடுக்க வேண்டும் (கொலொ. 1:10).
4. நற்கிரியைகளைச் செய்யப்பழக வேண்டும் (தீத்து 3:14).
5. நற்கிரியைகளால் நிறைந்திருக்க வேண்டும் (அப். 9:36).
6. நற்கிரியைகளைச் செய்வதற்க்குப் பக்தி வைராக்கியம் இருக்க வேண்டும் (தீத்து 2:14).
7. எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2 தீமோ. 3:17).
8. நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் (1 தீமோ 6:18).
9. நற்கிரியைகளில் ஸ்திரப்பட வேண்டும் (2 தெச. 2:17).
10. நற்கிரியைகளில் பூரணராக வேண்டும் (எபி. 13:21).
11. எந்த நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும் (2 தீமோ. 2:21, தீத்து 3:1).
12. நற்கிரியைகளில் பெருக வேண்டும் (2 கொரி. 9:8).
13. நற்கிரியைகளை செய்வதற்கு ஒருவரையொருவர் ஏவ வேண்டும் (எபி. 10:24).
14. மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெறும்படி நற்கிரியைகளைச் செய்யக்கூடாது (மத். 6:1-18).
15. தேவபக்தியுள்ள ஸ்திரீகள் நற்கிரியைகளை வெளிப்படுத்த வேண்டும் (1 தீமோ. 2:10).
16. தேவன் உங்கள் நற்கிரியைகளை நினைப்பார் (நெகே. 13:14; எபி. 6:9,10)
17. உங்கள் கிரியைகள் நியாயத்தீர்ப்பு நாளிலே வெளிப்படும் (பிரசங்கி 12:14; 2 கொரி. 5:10).

**நாம் செய்ய வேண்டிய சில நற்கிரியைகள்**

1. திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரித்தல் (யாக். 1:27; சங். 68:5; யோபு 29:13).
2. பசியாயிருப்பவர்களுக்கு போஜனங்கொடுத்தல் (மத் .25:35).
3. அந்நியர்களை உபசரித்தல் (மத். 25:35; எபி. 13:2; ரோமர் 12:13).
4. வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தல் (மத். 25:35).
5. வியாதியஸ்தர்களைச் சந்தித்தல் (மத். 25:35; லூக்கா 4:40; யாக் .5:14,15) .
6. சிறைச்சாலைகளில் இருப்பவர்களை நினைவு கூறுதல் (மத். 25:35; எபி. 10:34; 13:3).
7. ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுதல் (1 தீமோ. 6:17-19; யோபு 29:12; நீதி. 31:20)
8. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் (கலா. 6:1,2).
9. ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் (எபி. 3:12,13).
10. தேவனுடைய புண்ணியங்களை அறிவித்தல் (1 பேதுரு 2:9).

# ஒரு வேதாகமத்தின் டைரிக்குறிப்பிலிருந்து

**ஜனவரி:** அநேக வேலைகள் நிறைந்த நெருக்கமான நேரம் எனக்கு. குடும்பத்தில் பலர் என்னை இந்த வருடத்தில் வாசித்து முடிக்க முடிவு செய்து, முதல் இருவாரங்கள் என்னை உபயோகித்தனர். ஆனால் இப்போதோ என்னை முற்றிலும் மறந்துவிட்டனர்.

**பிப்ரவரி:** கடந்த வாரம் என் உரிமையாளர், சில மணித்துளிகள் என்னை உபயோகித்தார். எதற்குத் தெரியுமா? இன்னொருவரோடு அவருக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் இவருக்கு சாதகமாக சில வசனங்களைக் கண்டுபிடிக்க.

**மார்ச்:** தாத்தா, வீட்டிற்கு வந்திருக்கிறார். சுமார் ஒரு மணிநேரம் என்னைத் தன் மடிமேல் வைத்து 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தை வாசித்தார்.

**ஏப்ரல்:** இன்று என்னைப் பெட்டி ஒன்றில் போட்டு மூடிவிட்டார்கள். விடுமுறைக்காக வேறிடம் செல்கிறார்கள் போலும். வீட்டிலேயே என்னை விட்டுச்சென்றால் நலமாயிருக்கும். ஒரு மாத காலமும் பெட்டிக்குள் தானே இருக்கப்போகிறேன்.

**மே:** இன்னும் நான் பெட்டிக்குள் தான்.

**ஜூன்:** வீடு திரும்பியாகிவிட்டது. என் இடத்தில் அமர்ந்திருக்கிறேன். தற்போது என்னோடு சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். யார் தெரியுமா? மூன்று கதைப்புத்தகங்களும் நான்கு நகைச்சுவை ஏடுகளும் என்மேல் ஏறி உட்கார்ந்துள்ளனர்.

**ஜூலை:** இம்மாதத்தில் ஒரே ஒருநாள் மட்டும் நான் அதிகமாய் உபயோகிக்கப்பட்டேன். காரணம் என் உரிமையாளர் ஏதோ ஓரிடத்தில் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதால்!!

**ஆகஸ்ட்:** என் பக்கங்களில் சில பச்சை நிற சாயம் படிந்துள்ளது. அழகிய பூக்கள் என் பக்கங்களுக்கிடையில் வைத்து பராமரிக்கப்பட்டதன் விளைவு.

**செப்டம்பர்:** துண்டுப் பேப்பர்களை செருகிவைக்கும் ஒரு குப்பைப் புத்தகமாக நான் காட்சியளிக்கிறேன். அநேக செய்தித் தாள்களின் பகுதிகள் எனக்குள் அடைக்கப்பட்டுள்ளது.

**அக்டோபர்:** குடும்பத்தில் ஒருவர் மிகவும் வியாதிப்பட்டிருப்பதால் இன்று என்னைச் சிறிது உபயோகித்தார்கள். நன்றாக துடைக்கப்பட்டு மேஜையின் நடுவில் வைக்கப்பட்டுள்ளேன்.

**நவம்பர்:** யாரும் வியாதிப்படாததால், என் பழைய இடத்திற்கே போய்விட்டேன்.

**டிசம்பர்:** கிறிஸ்மஸ்க்காக ஆயத்தப்படுகிறார்கள். நிச்சயம் வண்ணப் பேப்பர்களுக்கடியில் தான் என் இடம். இவ்வருடம் அவ்வளவாய் நான் உபயோகிக்கப்படவில்லை.

## உங்கள் வேதாகமத்தின் நிலை எப்படி?

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால்
நானும் உன்பிள்ளைகளை மறந்துவிடுவேன். (ஓசியா 4:6)

# விசேஷ தினங்களும் ஜெபக்குறிப்புகளும்

1. **நவம்பர் 10** - உலக அறிவியல் தினம் (World Science Day for Peace and Development) - அறிவியல் ஆராய்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியும் பெருகி வரும் இக்காலத்தில் விஞ்ஞானம் மக்களுக்கு சமாதானத்தையும், வளர்ச்சியையும் கொடுக்க ஜெபிப்போம்.




2. **நவம்பர் 11** - தேசிய கல்வி தினம் (National Education Day) - இந்தியாவில் கல்வியறிவு பெறாத 35%ற்கும் அதிகமாக மக்களுக்காக ஜெபிப்போம்.
3. **நவம்பர் 14** - உலக நீரழிவு தினம் (World Diabetes Day) - உலகளவில் 36.6 கோடி மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கொடிய வியாதியிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்க ஜெபிப்போம். வருகிற 2030ம் ஆண்டு இந்த எண்ணிக்கை இருமடங்காக உயரும் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. நோயின் காரணங்களை அறிந்து மக்கள் விழிப்பாய் செயல்படஜெபிப்போம்.
4. **நவம்பர் 14** - குழந்தைகள் தினம் (India's Children day)- இந்தியாவில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றிற்காக ஜெபிப்போம். இந்தியாவில் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 22 கோடி சிறுபிள்ளைகளில் 10.5 கோடி சிறுபிள்ளைகள் மாத்திரமே பள்ளிக்குச் செல்கின்றனர். இந்நிலை மாற ஜெபிப்போம். பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளில் 5.75 இலட்சம் சிறுமிகள் விபச்சாரத் தொழிலில் உள்ளனர். இந்நிலை மாற ஜெபிப்போம். சரியான உணவு இல்லாமை, ஊட்டச்சத்து குறைவு, குறைவான மருத்துவ வசதி போன்ற காரணங்களினால் அநேக குழந்தைகள் மரித்துப்போகின்றன. இந்நிலை மாற ஜெபிப்போம்.
5. **நவம்பர் 14** - உலக பெண் குழந்தை தினம் (International Girls Day)- பெண் குழந்தைகளுக்கு எதிரான செயல்கள், வன்முறைகள், குற்றங்கள் நடைபெறாமலிருக்க ஜெபிப்போம். வேலை செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம். பெண் குழந்தைகள் எதிர்பார்க்கும் அன்பு, தங்கள் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்து கிடைக்க ஜெபிப்போம்.
6. **நவம்பர் 16** - உலக சகிப்புத்தன்மை தினம் (International day of Tolerance)- உலக மக்களிடையே சகிப்புத்தன்மை, மனித நேயம் வளர ஜெபிப்போம்
7. **நவம்பர் 19** - உலக கழிப்பறை தினம் (World Toilet Day)- உலகளவில் 26 இலட்சம் மக்கள் போதுமான கழிப்பறை வசதி இன்றி உள்ளனர். இந்த அடிப்படைத் தேவை சந்திக்கப்பட ஜெபிப்போம்.

8. **நவம்பர் 19** - உலக ஆண்கள் தினம் (International Men's Day) - கிறிஸ்தவ ஆண்களின் ஒழுக்கம், முன்மாதிரியான வாழ்க்கைக்காக ஜெபிப்போம்.

9. **டிசம்பர் 1** - உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் (World AIDS Awareness Day)- தற்பொழுது உலகளவில் 40 கோடி மக்கள் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் முற்றிலும் தடுக்கப்படும்படி ஜெபிப்போம். இந்தியாவில் 4.58 கோடி மக்களும், தமிழகத்தில் 8-10 இலட்சம் மக்களும் எயிட்ஸால் பாதிக்கப்பட்டள்ளனர். தேசத்தில் பாலுணர்வு வாழ்வில் பரிசுத்தம் காணப்பட ஜெபிப்போம்.

10. **டிசம்பர் 2** - உலக மாசு கட்டுப்பாட்டு தினம் (World Pollution Prevention) Day - சுத்தமற்ற தண்ணீரினால் ஒவ்வொரு நாளும் உலகளவில் 14,000 மக்கள் உயிரிழக்கின்றனர். சுற்றுப்புறத்தூய்மையில் நாடு வளர ஜெபிப்போம். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 1000 குழந்தைகள் வயிற்றுப்போக்கு நோயினால் மரிக்கின்றனர். சுத்தமான உணவு வசதி கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

11. **டிசம்பர் 2** - உலக அடிமைத்தன ஒழிப்பு தினம் (International Day for Abolition of slavery)- பெண் பிள்ளைகளை கடத்தியும், விற்றும் அடிமைப்படுத்தும் நிலை இந்தியாவில் விட்டு மறையஜெபிப்போம்.5 முதல் 14 வயதுடைய 7 இலட்சம் குழந்தைகள் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் விற்கப்படுகின்றனர். பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

12. **டிசம்பர் 3** - உலக ஊனமுற்றோர் தினம் (World Disabled day). ஆய்வின்படி உலகளவில் 65 கோடி மக்கள் ஊனமுற்று உள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள். தமிழகத்தில் மனவளர்ச்சி குன்றியுள்ள 5 இலட்சம் மக்களுக்காக ஜெபியுங்கள்.

13. **டிசம்பர் 9** - உலக லஞ்சஒழிப்பு தினம் (International Anti-Corruption Day)- லஞ்சம், ஊழல், சட்டம் அவமதித்தல் போன்ற காரியங்களை மறைய ஜெபியுங்கள்.

14. **டிசம்பர் 10** - மனித உரிமைகள் தினம் (Human Rights Day)- மனிதனுக்குத் தேவையான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படாமல் வழங்கப்பட ஜெபியுங்கள்.கட்டாய கல்வி உரிமையை அனைவரும் பயன்படுத்த ஜெபியுங்கள்.

15. **டிசம்பர் 14** - இந்திய கடற்படை தினம் (Indian Navy Day) - இன்று கொண்டாடப்படும் கடற்படை தினத்தில், நம் கடல் பகுதிகளைப் பாதுகாக்கும் வீரர்களுக்காக ஜெபியுங்கள்.

16. **டிசம்பர் 25** - கிறிஸ்துமஸ் தினம் (Christmas Day) - கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி நம் பட்டணத்திலும், தேசத்திலும் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

நன்றி : கேரீத்



# விசுவாசத்தை செயல்படுத்துங்கள்
## Activate your faith

**Rev. பெகின் சாமுவேல்** (AGCM Director)

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பரிபூரண ஜீவன் இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். நவம்பர் மாதம் நடைபெற இருக்கிற பைபிள் சாம்பியன்ஸ் வேதாகமத் தேர்வில் உங்கள் பிள்ளைகளை பங்குபெற செய்யுங்கள். அதற்காக ஆயத்தப்படுத்துங்கள். சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**உன் சுய புத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர்உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்** (நீதி 3:5,6).

நாம் வாழுகிற இந்த காலக்கட்டத்தில் உள்ள சூழ்நிலைகளைப் பார்க்கும்போது அநேக காரியங்கள் நம் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்த கேள்விக்குறியை ஏற்படுத்துகிறது. பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாய் சில காரியங்கள் காணப்படுகிறது.

### Educational Barriers (கல்வியில் ஏற்பட்டிருக்கிற தடைகள்)

பள்ளிகள் திறக்கப்படாமல் நமது பிள்ளைகளின் கல்வி சுமார் 2 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு ஆண்டுகளில் அவர்கள் எதையும் கற்க முடியாமல் இருக்கிறார்கள். பள்ளி சென்று கல்வி கற்க முடியாத நிலை. மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து பழகாமல், விளையாடாமல் இருந்து மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் நமது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன ஆகும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் கர்த்தர் இந்த தடைகளையெல்லாம் மாற்றி நமக்கு அற்புதத்தை செய்வார் என்று விசுவாசிப்போம். என் பிள்ளைகளின் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படும் என்று விசுவாச அறிக்கை செய்யுங்கள்.

### Medical Barriers (மருத்துவத்தில் ஏற்பட்டிருக்கிற தடைகள்)

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படாமல் இருக்க, நோய்த்தொற்று பரவாமல் இருக்க இன்றைய நாட்களில் தடுப்பூசிகள் பெரியோர்களுக்கு செலுத்தப்படுகிறது. ஆனால் சிறுவர்களின் நிலை என்ன? சிறு பிள்ளைகளை வெளியே அழைத்து செல்ல, கூட்டம் மிகுந்த இடங்களுக்கு செல்ல பாதுகாப்பற்ற நிலை காணப்படுகிறது. அரசாங்கமும் சிறுவர்களை அழைத்து செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கிறது. அவர்களுக்குரிய மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை என்று ஆய்வறிக்கை சொல்லுகிறது. சிறுவர்களுக்கு இந்த அலையின் தாக்கம் பெரிதும் இருக்கும் என்று பல எச்சரிப்புகள் வந்தன. கர்த்தருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், நம்முடைய ஜெபங்களினாலும் கர்த்தர் அந்த தாக்கத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்திருக்கிறார். இந்த வேளையிலும் நாம் மருத்துவ அறிக்கைகள் மேல் அல்ல. கர்த்தர் மேல் விசுவாசம் வைப்போம். தேவன் ஒவ்வொரு சிறு பிள்ளைகளையும் தப்புவித்து காக்க வல்லவர்.

## Spiritual Barriers (ஆவிக்குரிய வாழ்வில் ஏற்பட்டிருக்கிற தடைகள்)

அடுத்ததாக, சபைகள் பல மாதங்களாக திறக்கப்படாமலிருந்தது, ஞாயிறு பள்ளிகள் நடத்தமுடியாமலிருந்தது. பிள்ளைகள் சபை ஆராதனைகளில் பங்கு பெற முடியவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு இது பெரிய தடையாக இருந்தது. இப்பொழுது ஆலயங்கள் திறக்கப்பட்டுள்ளதால் சபை ஆராதனைகளிலும், ஞாயிறு பள்ளிகளிலும் பங்கெடுக்க வையுங்கள். பெற்றோர்களாகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியின் காரியங்களில் கவனம் செலுத்த வேண்டும். வேதாகமம் வாசிக்க, ஜெபிக்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அவர்கள் கர்த்தரோடு சரியான உறவில் உள்ளனரா என்று கண்காணியுங்கள். கர்த்தர் தாமே பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் காணப்படுகிற தடைகளை நீக்குவாராக.

அன்பான பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையைக் குறித்து கர்த்தர் சொல்லியிருக்கிற காரியங்களை அப்படியே விசுவாசியுங்கள். சூழ்நிலைகளைப் பார்க்காதீர்கள். அது உங்கள் பிள்ளைகளின் படிப்பைக் குறித்தோ, அவர்களின் சுகத்தைக் குறித்தோ இல்லையென்றால் ஆவிக்குரிய வாழ்வைக் குறித்ததாகவோ இருக்கலாம். விசுவாசத்தை உங்கள் வார்த்தைகளிலும் செயல்களிலும் வெளிப்படுத்துங்கள். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். ஆமென்.

---

## போட்டி எண் : 89 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : பிரபா; V.மேகலா; R.மயில்; J.சுமதி; அருண்; K.மகேஸ்வரி; ராதாமணி; E.கலா; ராணி பிளஸிங்; T.கலா; கோகிலா; மாது; மாரிமுத்து தாவீது; A.மஞ்சு; K.டோரா; K.சுபா; தங்கமணி; K.சாராள்; K.ராஜீ; M.சந்தியா; பூங்கோதை ; V.விஜி; A.மேரி; M.எஸ்தர்; S.முத்துலெட்சுமி; K.பொம்மி; S.எஸ்தர் கலா; K.மஞ்சு; கிரிஜா; V.பியூலா; S.ஜெயா; S.பிரியா; ரோஸ்லின்; G.முத்துலெட்சுமி; இம்மானுவேல் சாம்; M.பிரேமலதா; A.புனிதவள்ளி; சித்ரா பிளஸ்சி; V.செல்வி; L.குளோரி; ஜெயசிலின்; |**ஸ்ரீவில்லிபுத்தூர்** : பாஞ்சாலி; சத்யா; நெல்சன் செல்வராஜ்; ஆபிரகாம்; ஜெயராணி; நித்யா; குளோரி; புஷ்பா; தேவபிரியா; கிறிஸ்டி பிரியா; மெசி; |**இறச்சகுளம்**:எஸ்தர், மோனிஷ்; ஜெஸி; கலா; கவிதாபிரீ; நளினா ஷாலினி; அமலாவேணி; இந்துமதி; ஷோபா; ஜேஸ்மின்; காயத்ரி; |**திருநின்றவூர்:**ரோசி; அம்மு; புவனேஸ்வரி; ஏடா டாரியா; கேத்ரின்; ராஜேஸ்வரி; சிவானந்தம்; எழுலரசி; சிவராஜ்; |**தேனி:**பூமணி ஜான்சி; அன்புகனி; மீனா; தனம்; கிரேஸி; கார்த்திகாயினி; திரவியச்செல்வி; கிருபா; பிரின்ஸி; ஜீடித்நிம்சி; கிறிஸ்டினா ரேகா; |**மதுராந்தகம்:**துளசிமணி; சுனிதா ரோஸ்லின்; சிலம்பரசன்; நேசம்; சுந்தரி; மோனிகா விண்ணரசி; அபிராமி; | **மதுரை:** சுந்தரி; சுபத்ரா; பிரியங்கா; மேரிராஜ்; N.மேரி; கனகவல்லி; செல்லதாய் ராணி ; | **ஆறுமுகநேரி:** மீனா; வெண்ணிலா எஸ்தர்; பானுமதி; பிரேமா; சுகிர்தா; ஜாய்ஸ்மேரி; கஸ்தூரி; சுபாஷ் ; | **ஆலங்குளம் (வி) :** ஸ்டெல்லா; பிளாரன்ஸ்; கிருபா; ரெஜினாசாரு; ஸ்டீபன்; ஸ்டெல்லா மேரி; ; | **திருச்சி** : சாந்தி; எஸ்தர் அனிதா; ஹெலன்; சாந்தி; கிறிஸ்டி மகாலஷ்மி; மேரி சுஜாதா; |**கடையநல்லூர்** : செல்வி இந்திராணி; ஸ்டெல்லா; ஆஷாதேவி; தங்கராஜ்; சாமுவேல்; |**ஒட்டப்பிடாரம்** :சுப்ரமணியன்; மரியநேசம்; சரஸ்வதி; மெர்சி ;| **எடப்பாடி**: ஜோசப்மேரி; மாலதி; எப்சிபாள்; பாக்கியம்; ரெஜினா ; | **வத்ராப்** : கிதியோன்; ஜெபராணி; கல்பனா; அருள்செல்வி; | **பாளையங்கோட்டை** : பிரேமாரூத் : சில்வியா; சாந்தகுமாரி; மல்லிகா ; | **பெருங்துறை** : ஜெனிபர்; கெத்சியாள்; ஹெப்சிபா ; | **கிருஷ்ணகிரி** : ஐடா மனோகரன்; ஆனி மெர்சி; ரேச்சல் அனுசுயா ; | **நாசரேத்** : எஸ்தர்; மேரி; தாசன்மோசஸ்; |

## போட்டி எண் : 88 (சரியான விடை எழுதியவர்கள்) தொடர்ச்சி

**அச்சிறுப்பாக்கம்** : ரேஷ்மா; செல்வகுமாரி; கல்பனா தேவி; தமிழ்ச்செல்வி; | **இராமன்புதூர்** : அனிதா; லீதியாள்; அன்னம்மாள்; | **ஆண்டிபட்டி** : அன்னாள்; தேவபாக்கியம்; புளோரியா; | **அந்தமான்** : ஜேக்லின்; கெத்சியாள்; ஸ்டெல்லா மேரி; | **சாத்தூர்** : முத்துலெட்சுமி; கீதா வசந்தகுமாரி ; | **சிந்தாமணி** : சரண்யா; மேபல்; | **வில்லியனூர்** : ஷீபா, செல்லப்பன்; | **திருவள்ளூர்** : செல்வி ஜெயரூபவதி; டெனிசிலா; | **பெருங்குளம்** : பியூலா; கௌசல்யா ; | **சென்னை** : மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரித்யா; ஜெபராணி; செல்வி.சேட்பட் ; | **திருக்கச்சூர்** : தனலெட்சுமி; ஜோர்ஸ்ரூபி ; | **கல்லல்** :ஜோஸ்பில்; அபிஷாக்; | **குற்றாலம்** : ரூத்; வேளாங்கனி ; | **பழனி** : பிரீத்தி; கிறிஸ்டினா ; | **திசையன்விளை** : செல்வபாக்கியம்; ஜெயசீலி; | **கொட்டிவாக்கம்** : செல்வி; அஞ்சலி; | **தூத்துக்குடி** : பீபிஷெக்கினா; சில்வெஸ்டர்; | **ஆத்தூர்** : சாம் ஆப்ஸ்பான்; | **நாகமலை** : விஜிலா; ஹில்டா எலிசபெத்; ; | **பரமத்திவேலூர்** : பாமா ; | **கோயம்புத்தூர்** : ரித்மா; மேரி டென்சில்; | **நாகர்கோவில்** : மரியநேசம் ; | **திருப்பத்தூர்** : ரூபி ; | **பாண்டிச்சேரி** : தீபா ; | **முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி ; | **ஏர்வாடி**: மரகதம் ; | **அரியலூர்** : பியூலா; |**ஏற்காடு** : டேவிட்; | **சங்கர்நகர்** : மெர்சி;|**கொங்கத்தான்பாறை** : சந்திரா ; | **ஆழ்வார்குறிச்சி** : ஹரிலீலா ; | **அகஸ்தியர்பட்டி** : நியூமலா ; | **முதலூர்** : சுசிலா; **தாழையூத்து**: சகுந்தலா ; | **விருதுநகர்** : தாயம்மாள்; நிம்மி; | **ஆம்பூர்** : கிரிஜா சத்யா; | **பள்ளிக்கரணை** : பொன்செல்வி; ; | **வால்பாறை** : கவர்க்கல்; ; | **செங்கல்பட்டு**: அஜந்தா ; | **T.N.பாளையம்** : சுஜா ; | **ஏரல்** : சத்யா ; | **பழையகாயல்** : எலிசபெத் ; | **கிச்சிப்பாளையம்** : அந்தோணிஅம்மாள் ; | **தஞ்சாவூர்** : தேவகுமார்; |**உடுமலை**: சூசன்னாள்; |**கடாட்சபுரம்** : ரேவதி; |**வந்தவாசி** : அபிஷா சுமதி; ; |**புதுக்கோட்டை** : லலிதா; பெனினாள் ; |**குன்றக்குடி** : மணிமேகலை ; |**கீழ்வேளூர்** : கிரேனாப்பு ; |**பெரியகுளம்** : மனோகாசி ; | **மேலப்பாளையம்** : வேணி ; | **பொள்ளாச்சி** : மெர்சிடெய்சி ; | **பெங்களூர்** : தேவபிரியா; ; | **சுரண்டை** : குளோரி ; | **அரியலூர்** : இன்னாசியம்மாள் ; |**வேப்பமரத்தூர்** : கவிதா; |**விள்ளக்குரி** : கிருஷ்ணகுமாரி; |**நெய்யூர்** : ஷீலா ; |**சுண்டக்காமுத்தூர் (கோ)** : நிவேதா மார்ஷல் ; | **பாவூர்சத்திரம்** : ஜெசிலி; | **குரோம்பேட்டை** : ரெபெக்காள் ; | **பாலவாக்கம் (செ)** : அமுதவல்லி; | **இடையன்பாளையம்** : ஜான்சன்; | **அவடி (செ)** : சாந்தி; சந்திராபாய்; | **ஓசூர்** : பாண்டியம்மாள் ; |**புளியங்குடி** : சுந்தரி; | **திருப்பூர்** : கிருஷ்ணவேணி; |**மன்னார்குடி** : அருண்; ஷீபா ; |**பெருமாள்புரம்** : ஜாய் இந்திரா; |**விருத்தாசலம்** : சுகிர்தா |**நெல்வாய்** : அமலா; |**ஹாசம்பட்டி (சே)** : இவாஞ்சலின்;| **கம்பம்** : ஜோதிமணி; | **செங்கல்பட்டு** :மகாலஷ்மி;| **ஆழ்வார்திருநகரி** : பனிமலர்;| **கடலூர்** : கெத்சியாள் ஒய்ட்; | **பாகனேரி** : அமுதாராணி;| **நாகபட்டினம்** : வின்சென்ட்ராஜ்; **சூளைமேடு** : அருள்மேரி; |**வேலூர்** : தேவாசீர்வாதம்;|**நன்னிலம்** : சுந்தரமூர்த்தி;|**புதூர்** : கீர்த்தனா;| **சிவகங்கை** : தாமரைச்செல்வன்;|**தர்மபுரி** : ரூத்; நந்தினி; | **ரெட்டியார்பட்டி** ; சுதாசெல்வி; | **திருநெல்வேலி** : இவாஞ்சலின் சாரோன் ரோஸ்; |**புளியங்குடி** :ஜெயமணி

---

## போட்டி எண் - 89 (சரியான விடைகள்)

1.யாக்கோபு, யோவான்; 2.யவீரு; 3.திறக்கப்படுவாயாக; 4.விசுவாசியாதவன்; 5.வானமும், பூமியும், என் வார்த்தைகளோ;6. கொல்கொதா;7.கொர்பான்; 8.அக்கினியினால்;9.உற்சாகமுள்ளதுதான்,பலவீனமுள்ளது; 10.மனுஷனைத்; 11.சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்; 12.இயேசு; 13.லேவி; 14.யோவான்; 15.பர்திமேயு; 16.இரட்சிக்கப்படுவான்; 17.7(ஏழு); 18.2,3;19.மகதலேனா மரியாள்; 20.பெத்தானியா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 90

### லூக்கா சுவிசேஷம் இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. அதிக பாக்கியவான்கள் யார்?
2. இயேசு ஏறின படவு யாருடையதாயிருந்தது?
3. எதினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்?
4. எங்கே கோபுரம் விழுந்து பதினெட்டு பேரை கொன்றது?
5. நாகூமின் குமாரன் யார்?
6. நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை --------.
7 நீ விருந்து பண்ணும்போது --------, --------, --------, -------- அழைப்பாயாக.
8. யார் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பான்?
9. ஆயக்காரனுக்கு தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்தவன் யார்?
10. ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவி --------.
11. எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான கிராமம் எது?
12. எது யோவான் வரைக்கும் வழங்கி வந்தது?
13. மகா -------- நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்?
14. எது கூடாத காரியம்?
15. யார் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான்?
16. இராக்காலங்களில் இயேசு எங்கே தங்கி வந்தார்?
17. குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று யாரால் கட்டளை பிறந்தது?
18. யார் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவன் அல்ல?
19. பூமியின்மேல் -------- யைப் போட வந்தேன்?
20. யார் தன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான்?
21. -------- என்கிற பழமொழி.
22. யார் குருவைப் போல இருப்பான்?
23. இராயனுடையதை -------- தேவனுடையதை -------- செலுத்துங்கள்.
24. யார் வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன் என்றான்?
25. நான் பாவியான மனுஷன் நீர் என்னைவிட்டு போகவேண்டும் என்று சொன்னவன் யார்?

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.12.2021

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002


AGCM
தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியம்
நடத்தும்
BIBLE
CHAMPIONS
TAMIL & ENGLISH
2021
I PRIZE
II PRIZE
ENTRANCE FEES
பதிவுக் கட்டணம்
Only
₹25
PORTIONS
Group A Upto 6 Yrs - JUDGES 1-12
Group B AGE 7-9 - JUDGES 1-12
Group C AGE 10-13 - JUDGES 1-21
Group D AGE 14-17 - JUDGES 1-21
14 NOV 2021
Sunday 3- 4 pm
FOR MORE INFORMATION
WWW.AGCMTAMILNADU.COM
English–ல் படிப்பவர்கள் NKJV மொழிபெயர்ப்பை பயன்படுத்தவும்
மண்டல அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு
அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் சபை–சபை போதகருக்கு பரிசு
அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் மண்டலத்திற்கு பரிசு உண்டு (Pressbyter and AGCM Incharges)
Follow us on
Rev. Begin Samuel
+91 99449 52388
Rev. Melvin Manesh
+91 98437 22281
Rev. Daniel Rathnaraj
+91 80566 79025
Rev. Ebenezer
+91 98846 99087
Rev. Raja Selvam
+91 97867 65100

Registered News Paper Regd. No. 8206 / 62




BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165